விலை : 20.00
பக்கங்கள் : இருபது


# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 02 சனிக்கிழமை (19.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 304

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# வடக்கு - கிழக்கு இணைவை
# அரசால் தடுக்க முடியாது

## முதலமைச்சர் மீண்டும் ஆணித்தரம்



வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் புதிய தலைமைக் காரியாலயத் திறப்பு விழா நேற்று மு.ப. 10.30 மணியளவில் வட்டுக்கோட்டை வடகம்பரையில் நடைபெற்றது.

(யாழ்ப்பாணம்)

**வடக்கும் கிழக்கும் இணைய விரும்பினால் அரசாங்கத்தினால் தடுக்க முடியாது. கட்டாயம் அதனை நிறைவேற்றியே ஆக வேண்டும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் தெரிவித்துள்ளார்.**

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நிர்வாக அலகுகள் மூன்று படிகளாக வகுக்கப்பட்டுள்ளன. முழு நாட்டையும் பாராளுமன்றம் நிர்வகிக்கும் அதேநேரம், மாகாணங்களை மாகாண சபைகளும், அம்மாகாணங்களுக்குள் இருக்கும் பிரதேசங்களைப் பிரதேச சபைகளும் நிர்வகிக்கின்றன. முழுநாட்டையும் பாராளுமன்றம் நிர்வகிக்கும் போது பாராளுமன்றத்தினரில் பெரும்பான்மையோர் ஒரு குறிப்பிட்ட இனத்தையும், மதத்தை யும், மொழியையும் கொண்டவர்களாக இருந்து அவர்கள் மற்றைய இனங்களை, மதங்களை, மொழிகளை அசட்டை செய்யும் விதமாக நடந்து கொண்டதாலேயே அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து பிரிக்கப்பட்டு சிறிய அலகுகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோஷம் எழுந்தது.

அந்த வகையில் 1980-ம் ஆண்டுக்கு முன்னர் உள்ளூர் அதிகார சபைகள் மத்திய அரசாங்கங்களின முகவர்கள் போலத்தான் செயற்பட்டு வந்தன. பங்குதாரர்களாக அல்ல. 1980-ம்

20-ம் பக்கம் பார்க்க

## தமிழன் ஆளும் ஆட்சி வெகு தொலைவில் இல்லை

### மாவை எம்.பி முழக்கம்



(யாழ்ப்பாணம்)

எம்மை நாமே ஆட்சி செய்யும் காலம் வெகுதொலைவில் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வலி தென்மேற்கு பிரதேச தலைமைக் காரியாலயம் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது,

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த தேர்தலில் இராணுவத்தின் அடக்கு முறைக்கு நாம் அடி

20-ம் பக்கம் பார்க்க

## மாவீரர் துயிலும் இல்லத்தை சூழ படையினர் திடீர் குவிப்பு

**பதற்றம்**

(கிளிநொச்சி)

கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தை துப்புரவு செய்வதற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து நேற்று அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தை துப்புரவு செய்வதற்கு கரைச்சிப் பிரதேச சபையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் கனகபுரம் கிராமத்தில் பெருமளவு இராணுவத்தினரும பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த தீர்மானத்திற்கமைவாக துயிலுமில்ல வளாகத்தை சிரமதானப் பணியின் மூலம் துப்புரவு செய்வதெனவும் அதனைநேற்றே மேற்கொள்வதெனவும்

20-ம் பக்கம் பார்க்க

## மாவீரர் துயிலும் இல்ல மீளமைப்பு; துருவி விசாரிக்கிறது ரி.ஐ.டி

(கொழும்பு)

வடக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் மீளமைக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபையினால் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து பலத்த சர்ச்சை ஏற்பட்டுள்ளதுடன் தீர்மானத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் பயங்கரவாத தடுப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் (ரிஐடி) விசாரணை வலையத்துள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இந்த தீர்மானத்தின் எதிரொலியாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையும் நேற்று முன்தினம் (17.10.13) மற்றயதொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. அத்தீர்மானத்தில் வடக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் மீளமைக்கப்பட வேண்டும் எனவும் அதற்கு ஏதுவாக நேற்று அவற்றை சிரமதானம் செய்ய வேண்டும் எனவும் அந்த வகையில் கனகராயன் குளம் மாவீரர் துயிலும் இல்லப் பகுதி நேற்று (18.10.2013) சிரமதானம் செயயப்படும்எனவும்கரைச்சிப்பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றி இருந்தது.

இந்த வகையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இந்தத் தீர்மானதைக் கொண்டு வந்த உறுப்பினர் சிறிரஞ்சன் சிறிஸ்கந்தராஜா கொழும்பில் இருந்து சென்ற விசேட பயங்கரவாத குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு குறித்த பிரதேச சபைத் தலைவரையும் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு சமுகமளிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு

20-ம் பக்கம் பார்க்க

### நாச்சிமார் கோவில் தேர்முட்டியில்

## சடலமாக மீட்கப்பட்ட பெண் வன்புணர்வின் பின் கொலை

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவில் தேர்முட்டியில் சடலமாக மீட்கப்பட்ட பெண் வன்புணர்வின் பின்னரே கொலை செய்யப்பட்டுள்ளார்என யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சடலமாக மீட்கப்பட்ட பெண் நேற்றுமுன்தினம் யாரென இனங்காணப்படாத போதிலும் நேற்றைய தினம் உறவினர்களினால் இனங்காணப்பட்டுள்ளார்.

வவுனியா புஸ்ரல் வீதியினைச் சேர்ந்தவரும் தற்போது அரியாலை நெடுங்குளத்திற்கு அருகில் வசித்து வந்தவருமாகிய மார்க்கண்டு யோகராணி (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் மனநிலை பாதிக்கப்பட்டதாகவும் உறவினர்கள் என யாரும் இல்லாத நிலையில் யாழ்ப்பாணம் அரி


20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## தேர்முட்டியில் பெண்ணின் சடலம்

# கண்டனம் தெரிவித்து மெழுகுவர்த்தி போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நாச்சிமார் கோவில் தேர் முட்டியில் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த பெண்ணின் மரணம் தொடர்பில் விசாரணைகளைத் துரிதப்படுத்த வலியுறுத்தியும் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தும் நேற்றுக் காலை மெழுகுவர்த்தி ஏந்தியபடி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் குறித்த சடலம் மீட்கப்பட்டிருந்தது. சடலமாக மீட்கப்பட்டவர் அரியாலை நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த மார்க்கண்டு யோகராணி (வயது 45) என நேற்று இனங் காணப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பெண் கொலை செய்யப்பட்ட பின்பு அவரின் சடலம் அங்கு கொண்டுவந்து போடப்பட்டதா என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் மரணம் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி ஊர் மக்கள் மற்றும் பெண்கள் சார்பான நலன் விரும்பிகள் இணைந்து மெழுகுவர்த்தி ஏந்தியபடி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(செ-4-6)

# யாழ். பண்ணைப் பாலத்தில் கடலுக்குள் பாய்ந்தது கார்



யாழ்.பண்ணைப் பாலத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று பண்ணைக் கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளான சம்பவமொன்று நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

திருகோணமலையிலிருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் நால்வர் கார் ஒன்றில் தீவுப்பகுதியில் பல இடங்களைப் பார்வையிட்ட பின்னர் யாழ் நகருக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

இதன்போதே, அவர்கள் பயணித்த கார் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து அருகிலிருந்த பாதுகாப்புக் கட்டுக்களை உடைத்துக் கொண்டு கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காரினுள் இருந்த நால்வரும் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர் என்று தெரிவித்த யாழ். பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

(செ-11)

# தரகுப்பணம் சம்பாதிக்கவே பொதுநலவாய மாநாடு

தரகுப் பணம் சம்பாதிக்கும் நோக்கிலேயே பொதுநலவாய நாடுகள் மாநாடு நடத்தப்படுவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் இலங்கை மக்களுக்கு நன்மைகள் ஏற்படப் போவதில்லை.

இந்த மாநாட்டினால் ஆட்சியாளரகள்மட்டுமே நன்மை அடைவார்கள்.

ஆட்சியாளர்கள் பாரியளவில் தரகுப் பணத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

எனவே, இந்த மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது தலைமையிலான ஜனநாயகக் கட்சி இந்த மாநாட்டை புறக்கணிப்பதாகத் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கெனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(செ-11)






# இந்திரராஜா சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரராஜா வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் நேற்றைய தினம் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ளார்.

இச் சத்தியப் பிரமாண வைபவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் வலி. தென்மேற்கு பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் வவுனியாவைச் சேர்ந்த இந்திரராஜா எனும் வடக்கு மாகாண சபை உறுப்பினரே இவ்வாறு நேற்றைய தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவினை புறக்கணித்தவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(செ-4)


## கண்ணீர் அஞ்சலி



யுகப்பிரசாந்தின் அன்புப் பாட்டி

திருமதி

**செல்லப்பா மரியமுத்து**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

- யுகப்பிரசாந்தின் நண்பர்கள் -

(4309)



# பொதுக்கூட்டம்

யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை அபிவிருத்திச் சங்க விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பாடசாலையின் பரிசளிப்பு விழா தொடர்பான விடயங்களும் பாடசாலையின் முக்கிய செயற்பாடுகள் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளன.

(செ-7-60-18)


## இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 06:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது **கோழிப் பாகங்களும்** (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

(4305)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.


## அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா**

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தி எய்திய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா.

**20.10.2013 (ஞாயிறு) காலை 10.00 மணிக்கு** கிளிநொச்சிகூட்டுறவாளர்மண்டபத்தில்நடைபெறவுள்ளது. இதில் சித்தி எய்தியமாணவர்கள், பெற்றோர்கள், கற்பித்த ஆசிரியர்கள், பள்ளி முதல்வர்கள் அனைவரையும் கலந்துகொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கல்வி அபிவிருத்திக்குழு,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

# பதவியேற்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் 2013-14 ஆம் ஆண்டுக்கான பதவியேற்பு வைபவம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்துக்கு அருகே உள்ள லயன்ஸ் கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் சி.விக்னராசா அனுசரணையுடன் 25 இற்கு மேற்பட்ட விதவைகள், வறுமைக்கோட்டில் உள்ளவர்களுக்கு பொருள் உதவிகளும் பண உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

(செ-11)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லப்பா மரியமுத்து



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மின்சார நிலைய வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா மரியமுத்து நேற்று (18.10.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், கணபதி செல்லப்பாவின் அன்பு மனைவியும், சிவராசா (ஆஞ்சநேயர் பல்பொருள் வாணிபம் - சுன்னாகம்), திருநாவுக்கரசு, கருணாமூர்த்தி, ராஜேஸ்வரி, கண்ணதாசன் (லண்டன்), ஜெகதாசன், லோகதாசன், குகதாசன் (டோகா), திலகேஸ்வரி, லங்கேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2013)சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மின்சார நிலைய வீதி,**
**சுன்னாகம் தெற்கு.**

தகவல்:
**பேர்த்தி திருமதி சுரேஸ்குமார் - சிவாஜினி**

(4308)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூன்று குருமார்கள்

ஒரு ஊரில் ஒரு ஞானி இருந்தார். (சூபிஞானி–ஹசான்) நல்ல அனுபவசாலி. அவரிடம் கலந்து உரையாடுவதற்காக சில பேர் வந்தார்கள்.

"உங்கள் குரு யார்?" என்று கேட்டார்கள். அவர் நிமிர்ந்து பார்த்தார். எனக்கு ஆயிரக்கணக்கான குருமார்கள் இருக்கிறார்கள். அவர்களது பெயர்களை எல்லாம் சொல்ல ஆரம்பித்தால் காலம் போதாது. அதனால் முக்கியமான மூன்று பெயரைப் பற்றி மட்டும் உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்.

அந்த மூன்று பேரிலே ஒருவன் –ஒரு திருடன்.

ஒரு சமயம் நான் பாலைவனம் வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது வழி தவறிப் போய் ஒரு கிராமத்துக்குப் போய் விட்டேன். நள்ளிரவு ஆகிவிட்டது.

ஊரே உறங்கி விட்டது. அந்த நேரத்தில் ஒரு ஆள் மட்டும் ஒரு வீட்டின் சுவர் மீது ஏதோ செய்து உள்ளே நுழைவதற்கு முயன்று கொண்டிருந்தான்.

அவனிடம் போய், "நான் இன்றைக்கு இங்கு எங்காவது தங்க முடியுமா?" என்று கேட்டேன். அதற்கு அவன் "இந்த வேளையில் அதுமிகவும்சிரமம். ஒருதிருடனுடன்உங்களால் தங்கமுடியுமானால் நீங்கள்என்னுடன்தங்கலாம்" என்றான்.

நான் அவனுடன் ஒருமாதம் தங்கியிருந்தேன். ஒவ்வொரு நாள் இரவும் "இப்பொழுது நான் என்னுடைய வேலைக்குப் போகிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போவான்.

திரும்பி வந்ததும், "உனக்கு இன்றைக்கு ஏதாவது கிடைத் ததா?" என்று கேட்பேன். அதற்கு அவன் " இன்றைக்கு ஒன்றும் இல்லை. நாளைக்கு மறுபடியும் முயற்சி செய்வேன்!'' என்பான். ஒரு போதும் அவன் நம்பிக்கை இழந்ததே இல்லை. எப்பொழும் சந்தோசமாகவே இருந்தான். நானும் நெடுங் காலமாக தியானம் செய்து கொண்டே இருந்தேன். ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் நான் நம்பிக்கை இழந்து விடுவேன். அப்பொழுதெல்லாம் அந்த திருடனுடைய விடா முயற்சிதான் ஞாபகத்துக்கு வரும்.

என்னுடைய இரண்டாவது குரு–ஒரு நாய்.

ஒருசமயம்எனக்குமிகவும்தாகமாக இருந்தது. ஒருநதியை நோக்கி போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நாயும் ஆற்றில் தண்ணீர் குடிப்பதற்காக வந்தது. அதன் நிழல் ஆற்றின் மேல் தெரிந்தது. அதைப் பார்த்த அந்த நாய் பயந்து குரைக்கத் தொடங்கியது. பின் ஓடிப் போனது. இப்படியே சில தடவைகள் செய்தது. பின்னர் தைரியமாக தண்ணீரில் குதித்தது.

அதன் உருவம் மறைந்து விட்டது. இதைப்பார்த்ததும் எவ்வளவு தான் பயமிருந்தால்கூட ஒருவன் தைரியமாக காரியத்தில் இறங்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டேன். இந்தப் போதனை எனக்கு அந்த நாயிடமிருந்து கிடைத்தது.

என்னுடைய மூன்றாவது குரு– ஒரு சின்னக்குழந்தை.

நான் ஒரு சமயம் நகரத்துக்கு போனேன். அங்கே ஒரு குழந்தை எரியும் மெழுகுவர்த்தி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தது. நான் அந்தக் குழந்தையைப் பார்த்து, "இதை நீ தான் கொழுத்தி வந்தாயா?" என்று கேட்டேன். "ஆமாம்" என்றது அந்தக் குழந்தை. ''சரி... இந்த மெழுகுவர்த்தி முதல் எரியாமல் இருந்தது. இப்பொழுது எரிகிறது. இதற்கு எங்கிருந்து வெளிச்சம் வந்தது என்று எனக்கு காட்ட முடியுமா?" என்று கேட்டேன்.

இதற்கு அந்த குழந்தை சிரித்துக் கொண்டு மெழுகுவர்த் தியை ஊதி அணைத்தது. அதற்கு பின் என்னைப் பார்த்து...

"இப்பொழுது இந்த மொழுகுவர்த்தியின் வெளிச்சம் போனதை பார்த்தீர்கள் அல்வா, அது எங்கே போனது? என்று எனக்குச் சொல்லுங்கள்" என்றது.

அந்தக் குழந்தை இப்படிக் கேட்டதும் என்னிடமிருந்த ஆணவம் அழிந்தது. படித்ததெல்லாம் அந்த விநாடியில் சுக்குநூறாகி விட்டது.

எனது முட்டாள்தனத்தை நான் உணர்ந்தேன் என்று அந்த ஞானி எல்லாவற்றையும் விபரமாகக் கூறினார். அதனால் நாம் இன்னாரிடமிருந்துதான் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. யாரிடமிருந்தும் எதையும் கற்றுக் கொள்ளலாம்.

ஒருவன் நாய் ஒன்றை வளர்த்து வந்தான். அந்த நாய்க்கு வால் கிடையாது. வாலை யாரோ ஏற்கனவே வெட்டி விட்டார்கள்.

"இந்த நாய் தான் எனக்கு குரு. அதனிடமிருந்துகூட நான் பாடம் கற்றுக் கொண்டேன்" என்றான்.

"அப்படி என்ன தான் கற்றுக்கொண்டாய் அந்த வாலில்லாத நாயிடமிருந்து" என்று கேட்டேன்.

"யாரிடமும் வால் ஆட்டக் கூடாது என்ற பாடத்தை அதனிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன்!" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆஸிக்குள் பிரவேசிக்கும் இலங்கை அகதிகள் நாடு கடத்தப்படுவது உறுதி

## ஆஸி. குடிவரவு அமைச்சர் அறிவிப்பு

அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் சகல இலங்கைப் புகலிடக்கோரிக்கையாளர்களும் நாடு கடத்தப்படுவர் என அந்நாட்டுகுடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

கடல்வழியாக, வான்வழியாக அல்லது மூன்றாம் நாட்டின் ஊடாக அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் சகல இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களும் நாடு கடத்தப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 11ஆம் திகதி 79 பேரைக் கொண்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் படகு ஒன்று அவுஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவுகளை சென்றடைந்திருந்தது. இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாக நாடு கடத்த அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சு தீர்மானித்திருந்தது.

தொழிற்கட்சி ஆட்சிக் காலத்தில் ஐந்தில் ஒரு இலங்கைப் படகுப் பயணிகள் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

மூன்றாம் நாட்டின் ஊடாக பிரவேசிக்கும் இலங்கையர்கள் நாடு கடத்தப்படவில்லை.

எனினும் புதிய அரசாங்கம் இவ்வாறு அரைகுறை கொள்கைகளை அமுல்படுத்தப் போவதில்லை என மொரிசன் தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பிலான கொள்ளைகளில் தளர்வு காட்டப்படமாட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து படகுப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித் துள்ளார். (அ–2)

# பாடசாலைகளுக்கான சீருடை தயாரிப்பு பணி மாத்தளையில்

பாடசாலை சீருடைகளுக்கான துணிகளை 6 மாதங்களுக்குள் மாணவ, மாணவியருக்கு வழங்கும் வகையில் தொழிற்சாலையொன்று மாத்தளையில் அமைக்கப்படவுள்ளதாக புதிய வியாபார தொழிற்சாலை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சட்டத்தரணி லக்ஸ்மன் வசந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை சீருடைக்கான துணிகளை தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்று மாத்தளை நாலந்த கைத்தொழில் பேட்டையில் உருவாக்கப்படவுள்ளது.

பாடசாலை சீருடைகளுக்காக 150 கோடி யார்கள் தேவைப்படுகின்றன. ஆனால் இலங்கையில் 22 கோடி யார்கள் மட்டும் தயாரிக்கப்படுகின்றன.

மிகுதி 128 கோடி யார் துணிகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதற்காக கோடிக்கான பணம் வெளிநாடுகளுக்கு கொடுக்க வேண்டியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனையின் திட்டத்திற்கமைய ஆடை தொழிற்சாலைகள் உருவாக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஒரு ஆடைத் தொழிற்சாலை என்ற வகையில் நிறுவப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ–2)

# மொனராகலையில் மீன்மழை பொழிவு

மொனராகலை – ஹொரோன்புவ பிரதேசத்தில் மீன்மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் மழை இல்லாத சந்தர்ப்பத்தில் இவ்வாறு மீன்கள் விழுந்ததாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன்கள் இவ்வாறு வானத்தில் இருந்து நிலம் நோக்கி விழுந்ததாக குறித்த பிரதேச மக்களால் தெரிவிக்கப்பட்டது. (அ–2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 140 | 100-120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 |
| தக்காளி | 120 | 120 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 50 |
| கோவா | 40 | 60 | 80 |
| கரட் | 40 | 80 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 80 |
| வாழைக்காய் | 30 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயற்றங்காய் | 110 | 170 | 100 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 10 | 15 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 160 |
| போஞ்சி | 100 | 100 | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40-50 |
| இராசவள்ளி | – | – | – |

# இராசி பலன்

19.10.2013
(ஐப்பசி 02, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பிரதமை பின்னிரவு 5.42 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 3.50 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நாம் நலம் காணும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், போசன சுகமுண்டு.

**இடபம்** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம், பிரியமான சிலருக்காக சில செலவுகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்** எதிர்பார்த்த வருமானங்கள் வந்து சேரலாம், இனிய செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கன்னியமான ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் வந்து சேரலாம், தேக நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**கன்னி** சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பெரியவர்களை விமர்ச்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும், போசன சுகமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்** பகைவர்கள் விலகுவர், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், உடன் பிறப்புகள் உதவி செய்ய முன்வருவர், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் விரிவுடையும், மாமன், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளைக்கூற முன்வரலாம், இயல்பான வாழ்க்கையில் இனிமை சேரும் நாள், சுப செலவுகள் கூடும்.

**கும்பம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்ட முன்வருவர், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்** தனவரவு திருப்திகரமாக அமையும், புதிய பொருட்கள் வாங்குவதில் பிரியப்படுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சுபகாரியப் பேச்சுகள் முடிவாகலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனா பெண்கள் அணி அரையிறுதிக்கு தெரிவு


(மானிப்பாய்)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பெண்கள் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

தேசிய மட்ட பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கிடையிலான காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் அநுராதபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.


இச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி பங்கேற்று பதுளை கனங்கர மகாவித்தியாலய அணியுடனான போட்டியில் சமநிலையடைந்ததுடன், காலி விவல் மகாவித்தியாலய அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. (அ-9-23)




## வித்தியாலய முகப்பு மீது ஒயில் வீச்சு

(யாழ்ப்பாணம்)



யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தின் முகப்பு மீது இனந் தெரியாதோரால் கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது.

இப்பாடசாலை பழைய மாணவர் ஒருவரின் நிதி உதவியுடன் அமைக்கப் பட்டுவரும் முகப்பின் மீது கடந்த புதன்கிழமை இரவு இக்கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-7-60)

## சாயி பஜனை மண்டப திறப்பு

(யாழ்ப்பாணம்)

"சாயி சுரபி" சாயி பஜனை மண்டபம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை கற்கோவளம் எல்லை ஒழுங்கையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையங்களின் இணைப்பாளர் வே.சேனாதிராஜா, சிறப்பு விருந்தினராக வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய இணைப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7-19)

## பரிசளிப்பு விழா

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் விமலன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கற்றல் மற்றும் விளையாட்டு, இணைப் பாட விதானச் செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன. (அ-9-23)

# துன்னாலை கிழக்கு வயல் பகுதியில் குப்பை கொட்டுவதை நிறுத்துங்கள்

### பரு.பிரதேச சபையிடம் கமக்கார அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

துன்னாலை கிழக்கு வயல் வெளியின் வடக்குப் பக்கத்திலுள்ள சுமார் 30 ஏக்கர் தனியார் நிலங்கள் பருத்தித்துறை பிரதேச சபையால் கொட்டப்படும் குப்பை கூழங்களால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது என துன்னாலை கிழக்கு கமக்காரர் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச சபையினால் கொட்டப்படும் குப்பைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், எண்ணெய் கலந்த கருமண் விலங்குக் கழிவுகள், பொலித்தீன் பைகள் என்பவற்றால் இப்பகுதி சார்ந்த மேய்ச்சல் புற்தரைகள், வயல் வெளிகள் பாதிப் படைகின்றன.

இங்கு கொட்டப்படும் கழிவுகளை கால்நடைகள் உண்பதால் அவை இறக்கின்றன. மேலும் விவசாய நிலங்களில் கழிவுகள் பரவுவதால் விவசாயமும் பாதிப்படைந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக துன்னாலை கிழக்கு கமக்காரர் அமைப்பு, பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்த போதும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில் தொடர்ச்சியாக அவ்விடங்களில் கழிவுகள் கொட்டப்படுகின்றன.

கழிவகற்றலில் ஈடுபடும் பிரதேசசபை இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் கால்நடை வளர்ப்பு, விவசாயம் மற்றும் சுகாதாரம் என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்விடயம் தொடர்பான அதிகாரிகளும் சூழல் பாதுகாப்பாளர்களும் தகுந்த நடவடிக்கை எடுத்து உரிய தீர்வை வழங்க வேண்டுமென துன்னாலை கிழக்கு கமக்கார அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.(அ-7-18-60)

## பொற்பதி வீதியை புனரமைக்குக

(தும்பளை)

வடமராட்சி கிழக்கு பொற்பதி, குடத்தனை வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட இவ்வீதி பல வருடங்களாக புனரமைக்கப் படாது காணப்படுவதுடன் இவ்வீதியால் பயணிக்கும் மாணவர்கள், கடற்றொழிலாளர்கள், வியாபாரிகள், நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் குண்டும் குழியுமாக காணப்படும் இவ்வீதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதுடன் விபத்துக்களும் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

எனவே, உரிய அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(அ-7-19)

## விவசாய அமைச்சருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயம்சார் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக சகல கமக்காரர் அமைப்புக்கள், விதையுற்பத்தியாளர் சங்கம், பழ உற்பத்தியாளர் சங்கங்கள், வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்களுக்கும் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் இடையிலான சந்திப்பு நாளை மறுதினம் முற்பகல் 9.30 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது என யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறீபால சுந்தரம் அறிவித்துள்ளார்.

எனவே, மேற்குறித்த சங்கங்களின் பிரதிநிதிகளை உரிய நேரத்தில் இச்சந்திப்பில் கலந்து கொண்டு தங்களுக்குரிய தேவைகள், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பான கருத்துக்களை வழங்கி இக்கலந்துரையாடலை பயன்மிக்கவகையில் நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் அழைப்புவிடுத்துள்ளார். (அ-5-9)

# யாழ்ப்பாணத்தில் திராட்சை செய்கை முன்னேற்றம் கண்டு வருகின்றது

### யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர்

யாழ்.குடாநாட்டில் விவசாயத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திராட்சை செய்கை வெற்றியளித்துள்ளதாக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.

நாட்டிலே யாழ்.குடாவில்தான் பெருமளவான திராட்சை செய்கை பண்ணப்பட்டு வருகின்றது.

இதனபடிப்படையில், ஸ்ரேல்புழூ என்ற இன திராட்சையே யாழில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான பரீட்சார்ந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு யாழில் 5 விவசாயிகளின் தோட்டங்களில் திராட்சை செய்கை செய்யப் பட்டது.

அதன் பெறுபேறுகள் கணிசமான அளவு நன்மையாகவுள்ளதுடன், பழங்களின் பருமன், தன்மை என்பனவும் அதிகரித்துள்ளது.

இனிவரும் கால போகத்தின் போது ஏனைய விவசாயிகளுக்கும் திராட்சை செய்கை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. யாழ் மாவட்ட விவசாயிகள் இச் செய்கையினால் அதிக இலாபத்தையும் சந்தை வாய்ப்புக்களையும் திராட்சையின் கேள்வியும் உயர்வடையுமென யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-9)



வடமாகாண கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டில் உளநலதினவிழா அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் உரையாற்றுவதையும் வட மாகாண பிரதிக்கல்வி பணிப்பாளர் கிருபாகரன் முதியவரை கௌரவிப்பதையும் உளநலதின போட்டியில் வெற்றியீட்டிய மாணவருக்கு கல்வி அமைச்சின் உளசமூக இடையீட்டு நிகழ்ச்சி திட்டப்பணிப்பாளர் கே.பி.என்.பிரேமசிறி பரிசில் வழங்குவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்ட செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் பிரஜை கொலை விவகாரம்; சட்டமா அதிபர் வழக்கு தாக்கல்

அம்பாந்தோட்டை தங்காலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு பிரித்தானிய பிரஜையான குரம் ஷேக் என்பவரை கொலை செய்தமை மற்றும் அவருடைய நண்பியை பாலியல் ரீதியாக தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கையின் ஆளும் கட்சியின் அங்கத்தவரான தங்காலை பிரதேசசபை தலைவர் உட்பட 7 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபை தலைவரான சம்பத் விதான பத்திரண உட்பட 7 பேர் 2011 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்துக்கு முதல் நாள் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த செஞ்சிலுவை சங்க பணியாளரான குரம் ஷேக்கைத் தாக்கி கொலை செய்தனர்.

பின்னர் அவருடைய நண்பியான ரஷ்ய யுவதியை பாலியல் ரீதியாக தாக்கினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கையின் சட்டமா அதிபர் நேற்று முன்தினம் இவர்கள் 7 பேருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்று 2 வருடங்களாகியும் பிரித்தானியா கடும் அழுதங்களை பிரயோகித்த போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனினும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு பிரித்தானிய பிரதமர் இலங்கைக்கு வருகை தருவதையடுத்தே குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீது இலங்கையின் சட்டமா அதிபர் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)


## காணி விற்பனைக்கு


அரியாலை அரசடி லேனில் களஞ்சிய சாலைக்கு அருகாமையில் நன்னீர், மின்சார வசதிகள் உள்ள 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு

**தொடர்புகளுக்கு:**
**0776510375**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**பாலகிருஷ்ணன் திலகானந்தம்**
முத்து விநாயகபுரம்
ஒட்டுசுட்டான்



19.10.2013 அன்று நல்லூர் ஆதீன கலா மன்ற மண்டபத்தில் நடைபெறும் சைவப் புலவர் பட்டமளிப்பை முன்னிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

மனோ ஜெயா,
**குடும்பத்தினர்**

(4200)



## கவலைகள் களைந்திடக் கலைகளைக் கற்றிடுவோம்



**இன்றைய தலைமுறையினரின் இதயம் கவரும் இளம் இசையமைப்பாளர் இசை இன்பவானின் உதயதாரகை T.துவாரகனின் வானவில் இசை மன்றம்**

கீழைத்தேய வாத்தியங்கள், மேலைத்தேய வாத்தியங்கள், சங்கீதம், பரத நாட்டியம் என்பன முறைப்படி கற்பிக்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் குறிப்பிட்ட அளவு மாணவர்கள் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும் வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட வானவில் இசைக் குழுவினரின் vol 03 பிரம்மாண்டமான இசை நிகழ்வினை துல்லியமான படப்பிடிப்பின் மூலமான வீடியோ CDக்களை எதிர்வரும் தீபாவளித் தினத்தினை முன்னிட்டு இல.25, பஸ் நிலையம் முன்பாக அமைந்துள்ள சதீஸ் வீடியோ ஸ்தாபனத்தார் எமது நாடெங்கிலுமுள்ள அனைத்துச் CD கடைகளிலும் பெறும் வகையில் வெளியிடவுள்ளார்கள். என்பதனையும் எமது இசை ரசிக உள்ளங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**T.துவாரகன்**
இசை இயக்குநர்,
வானவில் இசை மன்றம்,
இல.43, கலைவாணி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
Face Book: Vaanavil Jaffna

**தொடர்புகளுக்கு:**
**ஜெ.தருமராஜா**
**0776260731,**
**0779110166**

(4303)


## தொல்பொருள் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ்

### வலியுறுத்துகிறது பொதுபல சேனா

(கொழும்பு)

தொல்பொருள் திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவர வேண்டுமென பொதுபலசேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தொல்பொருள் திணைக்களம் வரலாற்றுப் பொக்கிஷங்களை அழித்து வருவதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

எமது மரபுரிமைகளை பாதுகாக்கும் ஆற்றல் தொல்பொருள் திணைக்களத்திற்கு கிடையாது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சில ஊழல் மோசடி மிக்க தொல்பொருள் அதிகாரிகள் வரலாற்றுப் பொக்கிஷங்களை அழிக்கும் தரப்பினருடன் இணைந்து செயற்பட்டுவருவதாகத்தெரிவித்துள்ளார். தொல்பொருள் திணைக்களத்தைபாதுகாப்புஅமைச்சு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மாணவர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தர நாடகமும் அரங்கியலும் பாட மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் செயலமர்வு இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருதினங்களும்காலை 8.30 மணி முதல் 10 மணிவரை ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இவ்விடயம் தொடர்பான மேலதிகதகவல்களுக்கு 077 7295 709 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (அ-7)

# ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் 1,344 நிறுவனங்கள் பதிவாகியுள்ளன

## யாழ். கிளை பொறுப்பு அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் யாழ். கிளையில் இதுவரை ஆயிரத்து 344 நிறுவனங்கள் பதிவை மேற்கொண்டுள்ளதாக அலுவலகப் பொறுப்பு அதிகாரி ஜெ.தமிழ் அழகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தனது செயற்பாட்டை ஆரம்பித்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் கிளை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் மத்திய நிலையமாக செயற்படுகின்றது.

இதில் கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஆயிரத்து 344 நிறுவனங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. இதேவேளை, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் ஊழியர்களை பதியாத 20 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மீது கடந்த 9 மாதங்களில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)


HATTON NATIONAL BANK
HNB

ஹற்றன் நஷனல் வங்கி பருத்தித்துறை, நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய கிளைகளில் 25.08.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 20.10.2013 - 29.10.2013 (ஞாயிறு - செவ்வாய்) வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம். ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு

**- ஹற்றன் நஷனல் வங்கி**

(சி-5213)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 22<br>உயரம்: 5' 6''<br>தகைமை/தொழில்: A/L (கனடா PR)<br>தொ.இ: B 879 | பிறப்பு: 1985 இந்து (KO)<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 35 சூரி,செவ் 10இல்<br>உயரம்: 5' 4''<br>தகைமை/தொழில்: A/L (ஆசிரியை)<br>தொ.இ:G 1188 |
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 18.25<br>உயரம்: 5'11''<br>தகைமை/தொழில்: O/L பிரான்ஸ்<br>தொ.இ: B 882 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>செவ்: 2ல்<br>உயரம்: 5' 3'<br>தொ.இ: G 1182 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்:சுவாதி 2<br>கி.பா: 42 செவ்: 12ல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: விவசாய டிப்ளோமா பட்டதாரி, விவசாயப் போதனாசிரியர்<br>தொ.இ: B 883 | பிறப்பு: 1985 இந்து (செட்டியார்)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 11.5 சூரி,செவ் 3இல்<br>உயரம்: 5'4''<br>தகைமை/தொழில்: A/L Computer , Building Construction Technology<br>தொ.இ: G1184 |
| பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 16, செவ்.8 இல்<br>உயரம்: 6' 1''<br>தகைமை/தொழில்: Computerised Searching System<br>தொ.இ: B 887 | பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்:உத்தரம் 1<br>உயரம்: 5'3''<br>கி.பா:6 செவ் 8ல்<br>தகைமை/தொழில்: BBA, MCA கற்பித்தல் தனியார் நிறுவனம் (சைவபோசனம்)<br>தொ.இ: G 1873 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசினோ சட்ட மூலம் சபைக்கு வரும் போது நாட்டு பற்றாளர்கள் எதிர்க்க வேண்டும்

## ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் கட்சிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

**உபாயமார்க்க அபிவிருத்தி வேலைத்திட்ட சட்டமூலம் என்ற பெயரில் கசினோவை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படவுள்ள இந்த சட்ட மூலத்துக்கு ஆளும் கட்சியிலுள்ள நாட்டை நேசிக்கும் எம்.பி.க்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் ஜனநாயகத் தேசியக் கூட்டணியினர் எதிர்ப்பு தெரிவித்து இதனை தோற்கடிக்க முன்வரவேண்டும் என்று ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் இணை ஏற்பாட்டாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான தம்பர அமிலதேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கசினோவை உள்ளடக்கிய சட்டமூலத்துக்கும் எதிர்ப்பு வெளியிடுவார்கள் என்றே நம்புகின்றோம்.

கசினோ சட்டமூலத்தை கொண்டுவந்தால் வீதிக்கு இறங்கி போராடுவதாக அஸ்கிரிய தேரர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். தற்போது வீதிக்கு இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

கசினோ சூதாட்ட செயற்பாட்டை உள்ளடக்கிய உபாய மார்க்க அபிவிருத்தி வேலைத்திட்ட சட்டமூலத்தை எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதற்கு ஆதரவாக வாக்களித்து இதனை நிறைவேற்றுவதற்கு இடமாளித்தால் நாட்டின் கலாசாரம் சீர்கெட்டு விடும் என்பதில் எவ்விதமான சந்தேகமுமில்லை. அத்துடன் பாதகமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரே இந்த சட்டமூலத்தைக் கொண்டு வருகின்றார். இது நாட்டின் கலாசாரத்தை சீரழிப்பது என்பது அவரின் மனச்சாட்சிக்கு தெரிந்தும் அவர் இதனை செய்கின்றார்.

இதன்மூலம் கசினோவை இலங்கையில் முன்னெடுக்கவுள்ள வெளிநாட்டுநிறுவனத்துக்கு 25 வருடங்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஏன் இவ்வாறு வரிச்சலுகை வழங்க வேண்டும். கசினோவை கொண்டு வருவதே நாட்டுக்கு பாதகமாக அமையும்.

இந்நிலையில் 25 வருட வரிச்சலுகையும் வழங்கப்படுகின்றது. உண்மையில் வெளிநாடுகளில் இருந்து இலங்கை வந்து விவசாயத்துறையில் அல்லது உற்பத்தித் துறையில் முதலீடுகள் ஏற்பட்டால் எத்தனை வருடங்களுக்குஎன்றாலும் வரிச்சலுகை அளிக்கலாம்.

நிறைவேற்றப்படவுள்ள சட்டமூலத்தின் பிரகாரம் கசினோ விபசாரம் சூதாட்டம் மற்றும் மதுபாவனை அனைத்தும் ஒரே வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

குறிப்பாக இந்த சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு வரும்போது அதனை தோற்கடிக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று கோருகின்றோம்.

ஆளும் கட்சியில் நாட்டை நேசிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் இந்த சட்டமூலத்தை எதிர்க்க வேண்டும்.

இந்த சட்டமூலத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பதன் ஊடாக சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டால் அரசாங்கம் கவிழ்ந்து விடப் போவதில்லை. மாறாக யதார்த்த நிலையை அரசாங்கம் புரிந்துகொள்ளலாம் என்றார். (அ-2)



தேசிய சிறுவர் தின நிகழ்வுகள் யாழ். பிரதேச செயலக பிரிவில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ்ப்பாண சமுர்த்தி மகாசங்க சமூக அபிவிருத்தி மன்றத்தினால் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கான பாதணிகள் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மாணவி ஒருவருக்கு யாழ். பிராந்திய சேவைகள் சுகாதாரப் பணிப்பாளர் பாதணி வழங்குவதை படத்தில் காணலாம்.

# விருப்பு வாக்கு எண்ணியதில் குளறுபடி மேல் முறையீட்டு நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சிக்குள் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

தோல்வியடைந்த வேட்பாளர்கள் வெற்றியீட்டியவர்களுக்கு எதிராக தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தமது கட்சியின் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு கோரியுள்ளனர்.

ஜனநாயகக் கட்சிக்கு கண்டி மாவட்டத்தில் இரண்டு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. சீ.ஏ.கலப்பத்தி மற்றும் அசங்க திலகரட்ன ஆகிய இருவருமே இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாவர்.

எனினும் விருப்பு வாக்கு எண்ணப்பட்ட கணனியில் பதிவு செய்யப்பட்ட போது ஏதோ குளறுபடி இடம்பெற்றுள்ளதாக் ஏனைய வேட்பாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே மீண்டும் தமது கட்சி வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள் எண்ணப்படவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ-2)

# முன்னுதாரணமாக திகழும் கனடாவுக்கு கனேடிய தமிழர்கள் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

கனேடியத் தமிழர் அமைப்புக்களின் ஒத்தாசையுடன் கனேடிய தமிழர் சமூக நடத்தும் மாபெரும் கனேடியத் தமிழர் ஒன்று கூடல் ஒட்டாவா கனேடியப் பாராளுமன்ற முன்றலில் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ரொரன்டோ மொன்றியல் நகரங்களில் இருந்து பெருவாரியான தமிழர்கள் ஒட்டாவா வாழ் தமிழ் மக்களுடன் இந்நிகழ்வில் இணைந்து கொள்கின்றனர்.

ஒட்டாவாவில் பல்வேறு இராஜதந்திர செயற்பாடுகளை அன்று முன்னெடுக்கும் பல்வேறு பணிகளை பல தமிழர் அமைப்புக்கள் பகிர்ந்து முன்னெடுத்து வருவதாக செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒன்றுகூடல் நாளொன்று பல்வேறு இராஜதந் திர அரசியல் செயற்பாடுகள் நன்கு திட்டமிடப்பட்டு சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

ஒற்றுமைப்பட்ட இனமாக ஓரணியில் அணி திரள்வோம் என கனேடிய தமிழர் சமூகம் கனேடியத் தமிழர்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் மனித உரிமைகள் தமிழர்களுடனான இணக்கப்பாடு ஆகியவற்றை வெளிப்படையாக காரணம் காட்டி கனேடியப் பிரத மர் புறக்கணித்தமை ஈழத்தமிழர்களால் கனடாவிலும் தாயகத்திலும் பெரிதும் வரவேற்புக்கும் பாராட்டுதலுக்கும் உள்ளாகியுள்ளது.

அதுவும் குறிப்பாக சர்வதேச நாடுகளில் இலங்கை குறித்த விடயத்தில் கடந்த 30 மாதங்களுக்கு மேலாக கனேடிய தேசமே அனைத்து தேசங்களுக்கும் முன்னுதாரணமாக கடும் போக்கை கடைப்பிடித்து வரும் நிலையில் அதற்கு தமது நன்றியறிதலை தெரிவிக்கும் முகமாக மாபெரும் ஒன்றுகூடல் ஒன்றை கனேடிய பாராளுமன்ற முன்றலில் கனேடியத் தமிழர் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மின் இணைப்பு வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

இளவாலை மயிலங்கூடல் ஜே/121 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 2010 ஆம் ஆண்டில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் வீடுகளுக்கு மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் கடந்த 2010 ஆண்டு அண்ணளவாக 50 குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வரும் நிலையில் 30 வீடுகளின் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய மக்களுக்கு வழங்கப்பட்ட போதும் அவ் வீடுகளுக்கான மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை. இதன் காரணமாக க.பொ.த. சாதாரண தர ,உயர்தர மாணவர்களின் கல்விக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு இப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-7-18)

# இலங்கை வர முயன்ற நபர் கைதானார்

விசா காலம் முடிவடைந்த ஓராண்டாக பொலிஸார் கண்ணில் படாமல் தமிழகத்தில் தங்கியிருந்த இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனுஸ்கோடியில் இருந்து பொலிஸாருக்குத் தெரியாமல் படகில் நேற்று முன்தினம் இலங்கை செல்ல முயன்ற போதே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாக்காலம் முடிவடைந்ததும் இலங்கைக்கு திரும்பி வராது சென்னை, கோவை உள்ளிட்ட பகுதியில் தலைமறைவாக இருந்து கூலி வேலை பார்த்து வந்தார்.

திருட்டுத் தனமாக படகில் இலங்கை வரத் திட்டமிட்டு நேற்று முன்தினம் மாலை தனுஸ்கோடி கடற்கரைக்கு வந்த போது தகவல் அறிந்த மண்டப கடலோர பாதுகாப்பு பிரிவுப் பொலிஸர் குறித்த நபரை கைது செய்தனர்.

இவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி நகர் பகுதியில்

# பேருந்து நிலையம் இன்மையால் கால்கடுக்க நிற்கும் பயணிகள்

(பூநகரி)

அபிவிருத்தி அடைந்து வரும் கிளிநொச்சி நகர்பகுதியில் தனியார் பேருந்து நிலையமோ, அரச பேருந்து நிலையமோ இல்லாத நிலையில் வீதியின் இரு மருங்கிலும் சந்தைக்கு முன்பாக பேருந்து நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றுகின்ற நிலை காணப்படுகின்றது.

இந்நடவடிக்கையால் இப்பகுதி மக்கள் பெரும் நெருக்கடிகளைக் சந்திப்பதோடு விபத்துக்களும் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலை உள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச பேருந்துக்கான தரிப்பிடம் இல்லாததால் அடைக்கப்பட்ட டிப்போவில் இருந்து புறப்படும் பேருந்துகள் வெளியே வந்தவுடன் புறப்படுவதால் பயணிகள் பேருந்தை தவறவிடும் அவலங்களுக்கு உள்ளவதாக தெரிவித்தனர்.

உருத்திரபுரம், பூநகரி செல்லும் பேருந்துகள் புறப்படும் நேரம் உரியவர்களால் அறிவிக்கப்பட்டும் உரிய நேரத்திற்கு பேருந்து புறப்படாத நிலையில் கால்கடுக்க் வெயிலில் நிற்கும் நிலையை காணக் கூடியதாக உள்ளது.



50 மீற்றர் தூரத்தில் புகையிரதக் கடவையும் உள்ளதால் மக்கள் பெரும் நெருக்கடியையும் அவலத்தையும் எதிர்கொள்கின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு உரிய பகுதியினர் உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமான விடயமாகும். எனவே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ம-84)

## மின்னல் தாக்கி பெண் பலி



(பூந்தோட்டம்)

வவுனியா தாண்டிக்குளம் விவசாய பண்ணையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மின்னல் தாக்கி பெண்ணொருவர் பலியாகியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மெனிக்பாம் கிராமத்தை சேர்ந்த மகேந்திரன் பராசக்தி என்ற 45 வயதுடைய குடும்ப பெண்னே இவ்வாறு பலியானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் திருமதி ஏ. சகிலா பாணுவிடம் கேட்டபோது,

தமது தாண்டிக்குளம் விவசாய பண்ணையில் பணியில் ஈடுபட்டிருந்த வேளை பெண்ணொருவர் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்ததாகவும் இச் சமயம் அவரை உடனடியாக வவுனியா பொது வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் இறந்துவிட்டதாகவும் தெரிவித்ததுடன் மரண விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார். (ம-250-266)




## நெடுங்கேணியில் பாரிய மரக்கடத்தல் முறியடிப்பு



(குருமன்காடு)

வவுனியா நெடுங்கேணி பொலிஸ் பிரிவில் அனுமதியின்றி சூட்சுமமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்டவர்களை தாம் கைது செய்துள்ளதாக நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுங்கேணி நாவலர் வீதியில் சிறிய ரக ரக் வாகனத்தில் மறைத்து கொண்டு செல்லப்பட்ட அரியப்பட்ட மரங்களும் ஒலுமடு கிராமத்தில் இருந்து பார ஊர்தியில் அனுமதியின்றி கொண்டு செல்லப்பட்ட மரக் குற்றிகளும் பட்டிக்குடியிருப்பில் காட்டுப்பகுதியில் மறைத்து கொண்டு செல்வதற்கு இலகுவாக அரியப்பட்டு காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மரங்களுமே தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த கேரத், குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.என். எஸ் சிசிர ஆகியோரின் தலைமையிலான குழுவினர் சென்று கைப்பற்றியதாக தெரிவித்தனர்.

இம் மரக்கடத்தல் தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர். (ம-250-266)

## வவுனியாவில் சிறுவர் இல்லம் மூடப்பட்டது

(குருமன்காடு)

வவுனியா அட்டமஸ்கட பிரதேசத்தில்விஹாரையில் இயங்கி வந்த சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 4 சிறுவர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர் இல்லத்தில் சிறுவர்கள் பல்வேறு துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டமஸ்கட சுதர்மாராம விஹாரையில் இந்த சிறுவர் இல்லம், விஹாராதிபதியின் பொறுப்பில் இயங்கி வந்தது.

இந்தநிலையில் கடந்த 9 ஆம் திகதி சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்த சிறுவர் இல்லம் மூடப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர் இல்லத்தின் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர் ஒருவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த முறைப்பாட்டை சிறுவர் அதிகார சபை உறுதி செய்த நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் அதிகார சபை சிறுவர்களை பொறுப்பேற்றுள்ளது. (ம-250)



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அம்பாள்குள கிராமத்தை சேர்ந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அம்பாள்குள கிராம சக்தி சனசமூக நிலையத்தினால் அண்மையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் சித்தியடைந்த மாணவர்கள் அழைத்து வரப்படுவதையும், சித்தியடைந்த மாணவர் ஒருவருக்கு பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவதையும் கலைநிகழ்வுவையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முயல்களின் விளாம்பழப் பந்து

மரங்கள் அடர்ந்த அழகிய கானகம் அது. அதன் ஒரு பகுதியில் பெரிய கொய்யா மரம் ஒன்று இருந்தது. இந்த கொய்யா மரத்தை ஒட்டி ஓர் ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்தில் சில குரங்குகள் வசித்து வந்தன.

அந்த கொய்யா மரத்தின் கீழ் இரண்டு முயல்கள் விளையாடிக் கொண்டிருந்தன. அந்த மரத்தில் நிறைய கொய்யாப் பழங்களிருந்தன. இரு முயல்களில் ஒரு முயலுக்கு கொய்யாப் பழத்தைப் பார்த்ததும் அதை சாப்பிடவேண்டுமென்ற ஆசை பிறந்தது.

"அண்ணா எனக்கு ஒரு கொய்யாப்பழம் வேணும். பறிச்சுத் தர்றியா?"

"கொய்யாப்பழம் ரொம்ப உயரத்திலே இருக்குடா. அதை என்னால் பறிக்க முடியாதே"

கவலையோடு சொன்னான் முயல் அண்ணன்.

"அதெல்லாம் முடியாது. எனக்கு கொய்யாப்பழம் வேணும்"

முயல் தம்பி அடம்பிடித்து, அழ ஆரம்பித்தான்.

"சரி, அழாதேடா தம்பி. வேற ஏதாவது வழி இருக்கான்னு பார்க்கலாம்"

முயல் தம்பி ஆசைப்பட்டு கேட்டால் உடனே அதைக் கொடுத்துவிடு வான் முயல் அண்ணன்.

அருகில் இருந்த ஆலமரத்தில் இரு குட்டிக் குரங்குகள் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்த முயல் அண்ணன் அங்கே போனான்.

"குரங்கே குரங்கே! என்னோட முயல் தம்பி கொய்யாப்பழம் சாப்பிடணும்னு ஆசைப்படறான். கொஞ்



சம் பறிச்சுத் தாயேன்"

"அதெல்லாம் முடியாது. உனக்கு எதுக்கு நான் பறிச்சித் தரணும். அன்னைக்கு நாங்க ரெண்டுபேரும் உங்க கூட விளையாட வரட்டுமான்னு கேட்டப்ப வேணாம்னு சொன்னேயில்லே. முடியாது போ"

குரங்கை விளையாட்டில் சேர்த்துக் கொள்ளாதது தவறு என்பது முயலுக்கு இப்போது புரிந்தது.

"அன்னைக்கு ஏதோ சொல்லிட்டேன். மனசுல வெச்சுக்காதே. என் தம்பிக்காக கொஞ்சம் கொய்யாப் பழத்தை பறிச்சிப்போடேன்"

குரங்கு பிடிவாதமாக மறுத்து விட்டது.

ஏமாற்றத்துடன் இரு முயல்களும் தங்கள் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தன.

"கவலைப்படாதே தம்பி. எல்லா வெற்றிக்கும் ஒரு வழி இருக்கு. அந்த வழி மூலமா போனா எதையும் சாதிக்கலாம்.

முடியாதுன்னு சொன்ன அந்த குரங்கையே உனக்கு கொய்யாப் பழத்தைப் பறிச்சித் தர்ற மாதிரி பண்றேன். சரியா?"

அண்ணனின் பேச்சு முயல் தம்பிக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

வழியில் ஒரு பெரிய விளாம்பழம் கிடந்தது. அது மரத்திலிருந்து விழுந்து நீண்ட நாட்கள் ஆகியிருக்கும் போலிக்கிறது. அதனால் காய்ந்து அதன் பச்சை நிறம் போய் பழுப்பு நிறத்திற்கு வந்திருந்தது.

முயல் அண்ணா அதை உருட்டிப் பார்த்தது. அது இப்போது ஒரு பந்துபோல லேசாக இருந்தது.

இதைப் பார்த்த முயல் தம்பி சந்தோஷப்பட்டான்.

"அண்ணா, விளையாட பந்து கிடைச்சிடுச்சி. நாளையிலேயிருந்து நாம ரெண்டு பேரும் இந்த பந்தை வெச்சி விளையாடலாம்"

அடுத்த நாள் இரு முயல்களும் அந்த விளாம்பழப் பந்தை எடுத்துக்கொண்டு விளையாடச் சென்றன. வழக்கம் போல அந்த கொய்யா மரத்தின் கீழ் இரு முயல்களும் அந்த பந்தை வைத்து உருட்டி விளையாடிக்கொண்டிருந்தன.

ஆலமரத்தின் மேல் இருந்த குட்டிக் குரங்குகள் இரண்டும் முயல்கள் பந்து விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தன. தாங்களும் முயல்களோடு சேர்ந்து பந்து விளையாட விரும்பின. ஆனால், முயல்கள் நேற்று கொய்யாப்பழம் கேட்டபோது தம்மால் பறித்துப்போட முடியாது என்று சொன்னதால் முயல்கள் தம்மை வியைாட்டில் சேர்த்துக்கொள்ளாது என்று நினைத்தன. இருந்தாலும் கேட்டுப் பார்ப்போம் என்று நினைத்தது ஒரு குரங்குக் குட்டி.

"முயலே! முயலே! பந்து ரொம்ப நல்லா இருக்கே எங்கே வாங்கினீங்க"

இப்போது முயல் அண்ணன் யோசித்தான்.

"இது இப்ப வாங்கினது இல்லே. எங்க அப்பா சின்னப் பிள்ளையா இருந்தப்ப விளையாடின பந்து. இது எவ்வளவு விலை கொடுத்தாலும் இப்ப கிடைக்காது. நேத்துதான் எங்க அப்பா இதை எங்களுக்கு எடுத்து விளையாடத் தந்தாரு. இதை யாருக்கும் தரக்கூடாதுன்னு சொல்லியிருக்காரு"

"எங்களையும் உங்களோட விளையாட்டுலே சேர்த்துக்கிறியா?"

"நேத்து கொய்யாப்பழம் கேட்டோம். நீங்க பறிச்சித் தரமுடியாதுன்னு சொன்னீங்க. உங்களை எதுக்கு நாங்க விளையாட்டுக்கு சேர்த்துக்கணும்?"

"தெரியாம அப்படி சொல்லிட்டோம். இப்ப வேணும்னா பழத்தை பறிச்சி போடட்டுமா?"

"என்ன முயல் தம்பி. இவங்களை விளையாட்டுக்கு சேர்த்துக்கலாமா?"

"சரிண்ணா. விளையாட்டுக்கு சேர்த்துக்கலாம்"

"தம்பி சரின்னு சொல்லிட்டான். கொய்யாப்பழத்தை பறிச்சிப்போடுங்க. சாப்பிட்டுட்டு விளையாடாம்"

குரங்குக் குட்டிகள் இரண்டும் கொய்யாப்பழத்தை பறித்துப் போட்டன. முயல் தம்பி ஆசையாய் அந்தப் பழங்களை சாப்பிட்டான்.

அண்ணன் முயலும் இரண்டொரு பழங்களை சாப்பிட்டான். அந்த கொய்யாப்பழங்கள் அளவில் சிறியதாக இருந்தாலும் மிகவும் ருசியாக இருந்தன.

பழத்தை சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் பந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள்.



மாலை இருட்டத் தொடங்கியது. பந்தை எடுத்துக்கொண்டு இருவரும் புறப்பட்டார்கள். அப்போது ஒரு குரங்குக் குட்டி சொன்னது.

"முயலே! பந்தை இங்கேயே வெச்சிட்டுப் போங்களேன். பத்திரமாக இருக்கும். தினமும் நாம் விளையாடலாம்"

"வேணாம் குரங்குத் தம்பி. நாங்க தினமும் வரும்போது இதை மறக்காம கொண்டு வர்றோம். நாம எல்லோரும் விளையாடலாம். சரியா?"

பந்தை எடுத்துக்கொண்டு இருவரும் புறப்பட்டனர்.

அந்த விளாம்பழப் பந்து இருக்கும் வரை இனி தினமும் இருவரும் சுலபமாக கொய்யப்பழம் சாப்பிடலாம்.

★★★★★★★★★★★★★★

## 10.2013 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 11216- லண்டனில் ஜோன் மன்னன் இறக்க, அவனது ஒன்பது வயது மகன் மூன்றாம் ஹென்றி ஆட்சிக்கு வந்தான்.
- 1453-பிரெஞ்சு போர்டோ நகரைக் கைப்பற்றியதுடன் நூறாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.
- 1469-அரகன் நாட்டு இளவரசன் இரண்டாம் பேர்டினண்டுக்கும் காஸ்டில் நாட்டின் இளவரசி இசபெல்லாவுக்கும் திருமணம் நடைபெற்றது. இந்நிகழ்வு பின்னர் 1516 இல் ஸ்பெயின் நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வழிகோலியது.
- 1806-எயிட்டியின் மன்னன் முதலாம் ஜாக் படுகொலை செய்யப்பட்டான்.
- 1813- ஜெர்மனியின் லைப்சிக் நகரில் நெப்போலியன் பொனபார்ட் பெரும் தோல்வியடைந்தான். ரைன் கூட்டமைப்பு முடிவுக்கு வந்தது.
- 1864-அமெரிக்க உள்நாட்டுப்போர்: கூட்டமைப்பு படையினர் கனடாவில் இருந்து வேர்மொண்ட் மாநிலத்தில் சென் அல்பான்ஸ் நகரைத் தாக்கினர்.
- 1912- லிபியாவின் திரிப்பொலி நகரை இத்தா லியப் படைகள் ஒட்டோமான் பேரரசிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1921-லிஸ்பன் நகரில் இடம்பெற்ற புரட்சியை அடுத்து போர்த்துக்கல் பிரதமர் அந்தோனியோ கிரரஞ்சோ உட்படப் பல அரசியல் வாதிகள் கொல்லப்பட்டனர்.
- 1935-எதியோப்பியாவை இத்தாலிய கைப்பற்றியதை அடுத்து நாடுகளின் கூட்டணி இத்தாலி மீது பொருளாதார தடைகளை அறிவித்தது.
- 1943- காசநோய்க்கான Streptomycin என்ற மருந்து றட்கஸ் பல்கலைக்கழகத்தில் பிரித்தெடுக்கப்பட்டது.
- 1954-சோ ஓயு மலையின் உச்சி முதன் முறையாக எட்டப்பட்டது.
- 1960-ஐக்கிய அமெரிக்க நாடுகள் கம்யூனிசக் கியூபா மீது பொருளாதார தடைகளை விதித்தது.
- 1974-நியுயே நியூசிலாந்திடமிரருந்து விடுதலை பெற்று சுயாட்சி மண்டலமாகியது.
- 1976-சிம்பன்சி உலகின் அருகி வரும் மிருக இனமாக அறிவிக்கப்பட்டது.
- 1983-மொசாம்பிக் ஜனாதிபதி சமோரா மேச்சல் உட்பட 33 பேர் விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டனர்.
- 2000- பிபிசியின் யாழ்ப்பாண நிருபர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார்.
- 2003-திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அன்னை தெரேசாவை முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.
- 2005-மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்காக சதாம் ஹுசைனுக்கு எதிரான வழக்குத் தொடங்கியது.

பிறப்புக்கள்

- 1910- சுப்பிரமணியன் சந்திரசேகர், நோபல் விருது பெற்ற இந்திய இயற்பியலாளர் (இ.1995)
- 1976- கோ சன்,தென்கொரிய விண்வெளி வீரர்

இறப்புக்கள்

- 1937-எர்னஸ்ட் ரதர்போர்ட், நியூசிலாந்து இயற்பியல் அறிஞர் (பி.1871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி



ஆன்மீகம் 11

...அதுவும் உங்களுக்கு போதிக்கப்பட்ட ஒரு சடங்காகவே ஆகிவிட்டது. அது வெறும் கோரிக்கைகள் இருக்கும்வரை பிராத்தனையால் புனிதத்தன்மை இருக்காது. ஆனால், பிரார்த்தனையின் அடிப்படை கடவுளிடம் பேசுகிற முயற்சி, பிராத்தனை வழியாக கடவுளிடம் பேசுகிறீர்கள்.

இதில் என்ன சிக்கல் என்றால் இத்தனை ஆண்டுகளில் நீங்களே தொடர்ந்து, பேசிக்கொண்டேயிருக்கிறீர்களே தவிர அவரை ஒரு வார்த்தைகூட பேச அனுமதிக்கவில்லை. நீங்கள் ஒரு நண்பரைப் பார்க்க போகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர் வீட்டில் போய் அவரை ஒரு வார்த்தைகூட பேச அனுமதிக்காமல் நீங்களே தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அரைமணி நேரம், ஒரு மணி நேரம் பேசினால் என்னாகும். அடுத்தமுறை நீங்கள் அவர் வீட்டுக்குப் போகும் போது அவர் உங்களைப்பார்க்கவே பயப்படுவார். வீட்டுக்குள் இருந்து கொண்டே இல்லை என்று சொல்லி அனுப்பி விடுவார்.

இப்போது கடவுளிடமும் அதுதான் நிகழ்ந்திருக்கிறது. நீங்கள் சொல்வதைப் பார்த்து அவர் இருந்து கொண்டே இல்லாது போல் பாசாங்கு செய்கிறார். எனவே, நீங்கள் பேசுவதை நிறுத்திக்கொண்டு, கடவுளைப் பேச அனுமதிப்பதற்குத்தான் தியானம் என்று பெயர்.


தியானம் என்பது, இந்தப் படைப்பின் மூலத்தை உணர்வதற்கான வழி. வெறுமனே கண்மூடி அமர்வது, தியானமல்ல. பலர், வசியக் கலைக்கும், தியானத்திற்கும் உள்ள வேறுபாடு பற்றி என்னிடம் கேட்டிருக்கிறீர்கள். இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரான நிலைகள். வசியத்தின் போது யாரோ ஒருவர், அல்லது ஏதோ ஒன்றின் ஆளுமைக்குள் நீங்கள், அல்லது ஏதோ ஒன்றின் ஆளுமைக்குள் நாங்கள் அகப்பட நேருகிறது. அப்போது விழிப்பு நிலை இருக்காது. ஆனால், தியானம் என்பது முழு விழிப்புணர்வில் நிகழ்வது. தியானத்தில் எல்லாவற்றிடமிருந்தும் விலகி, சுதந்திரமாக இருக்கிறீர்கள்.

சுதந்திரம் பொதுவாக அச்சமூட்டுவதாக இருக்கிறது. அதனால்தான் மேலைநாடுகளில், தியானம் என்றாலே அஞ்சுகிற நிலை இருந்தது. எல்லோரும், சுதந்திரத்தை விரும்புவதாகச் சொல்லிக்கொண்டால்கூட அடிப்படையில் ஏதாவதொன்றில் சிறைப்பட்டிருக்கவே விரும்புகிறார்கள்.

மனைவிமார்கள் மீது, கணவன்கள் ஒரு புகார் சொல்வதுண்டு. எப்போதும் தங்களைத் தொந்தரவு செய்து கொண்டேயிருக்கிறார்கள். அது வேண்டும், இதுவேண்டும், அங்கே அழைத்துச்செல்லுங்கள் என்றெல்லாம் தொல்லைப்படுத்திக்கொண்டேயிருக்கிறார்கள் என்று கணவன்மார்கள் அலுத்துக்கொள்வதுண்டு. அந்தப் பெண்கள் தியானம் செய்யத் தொடங்கியபின் தமது கணவன்மார்களிடம் எதையும் கேட்பதில்லை. உடனே இந்த கணவன்மார்கள் கவலைப்படத் தொடங்குகிறார்கள். பெண்கள் யாரையும் சாராமல் தனித்திருப்பதும் தங்களையும் தொல்லை செய்யாமல் இருப்பதும், அவர்களை தடுமாறச் செய்கிறது.

தியானத்தின் வழியாக சார்பு நிலையிலிருந்து விடுதலைபெற முடியும் என்கிற அனுபவ உண்மைக்கு மனம், முதலில் தயாரடைய வேண்டும். தியானம் என்பது விழிப்புநிலை. தியானம் என்பது சுதந்திரம்.

## தன்னை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மனிதனை யாரும், எதுவும், அடிமைப்படுத்திவிட முடியாது




தியானம் என்பது சுதந்திரம் என்பதை விட தியானம் என்பதே சுதந்திரம் என்று சொல்ல வேண்டும்.

தன்னை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மனிதனை யாரும், எதுவும் அடிமைப்படுத்திவிட முடியாது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# "அனைத்து வேட்பாளரையும் நிராகரிக்கும் உரிமை" - இந்திய தேர்தல் சீர்திருத்தம்



இந்திய ஜனநாயகம் புதுமையுடன் பழமையைப் பாதுகாத்து வருகின்றது. சமீபத்தில் இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய "யாருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை" (none of the above) என்ற வாக்குரிமையை செலுத்தும் உரிமை இந்திய வாக்காளர்களின் சுதந்திரமான வேட்பாளர் தேர்வு முறையில் இன்னொரு மைல்கல் மட்டுமல்ல, இந்திய தேர்தல் சீர்திருத்தத்தின் இன்னொரு பரிணாம வளர்ச்சி!

தேர்தலும் சீர்திருத்தங்களும் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்றாலும் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு புதிய சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு இன்று ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளில் "யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை" என்ற உரிமையை வழங்கும் 14-வது நாடாக முன்னிலை பெற்றுள்ளது.

### தேர்தல் சீர்திருத்தம் எப்படி வந்தது?

இந்த சீர்திருத்தம் இப்படித்தான் தொடங்கியது. 1995 ஆண்டு காலப்பகுதியில் அப்போது இருந்த பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு தேர்தல் வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு ஏதாவது வழிகள் உண்டா என்று ஆய்வு செய்தது. ஏனென்றால் ஒரு தேர்தல் வழக்கு முடிவதற்குள் அவரின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாண்டு பதவிக்காலம் முடிந்துவிடும். இதை நீக்குவதற்காக அன்று இருந்த காங்கிரஸ் அரசின் மத்திய சட்ட அமைச்சகம் இந்திய சட்ட ஆணையத்திற்கு ஒரு கடிதம் எழுதியது. ஏனென்றால் சட்டத்தில் திருத்தங்கள், வழிமுறைகள் பற்றி ஆய்வு செய்து பரிந்துரை செய்வது இந்திய சட்ட ஆணையம்தான்.

இதை அடுத்து வந்த வாய்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசும் தொடர் நடவடிக்கைகளை எடுத்தது. இந்நிலையில் 1999 ஆம் வருடக் காலப்பகுதியில் இந்திய சட்ட ஆணையத்தின் தலைவராக இருந்து- ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி பி.பி.ஜீவன்ரெட்டி இது பற்றி ஆய்வு மேற்கொண்டார். அனைத்துக் கட்சி தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். பல்வேறு மாநில தலைநகரங்களில் கூட்டம் நடத்தி அறிவுசார்ந்த வல்லுனர்களின் கருத்துக்களைக் கேட்டார். அதன்பிறகு தேர்தல் சீர்திருத்தம் பற்றி பல்வேறு பரிந்துரைகளை சட்டக் கமிஷனின் 170-வது அறிக்கையில் வழங்கினார். அவற்றுள் ஒன்றுதான் "நெகட்டிவ் ஓட்டிங்" என்று கூறப்படுகின்ற "யாருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை" என்ற வாக்குரிமை.

### இந்தியச் சட்டக் கமிஷன் கொடுத்த பரிந்துரை!

இந்த வாக்குரிமையைக் கொடுப்பதற்கு ஜீவன்ரெட்டி சொன்ன விடயங்கள் என்னென்ன தெரியுமா? இந்த உரிமை இந்திய ஜனநாயகத்திற்கு இன்றைக்கு கதறும் தேவை என்றே வலியுறுத்தினார் ஜீவன்ரெட்டி. தேர்தலில் நிற்கும் எந்த வேட்பாளரையும் ஆதரிக்க வாக்காளர் விரும்பவில்லை என்றால் இந்த வாக்கைச் செலுத்தும் வகையில் வாக்குச் சீட்டின் கடைசியில் ஒரு இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்று சொன்னது சட்டக் கமிஷன் தலைவர், இந்த வாக்குரிமை கிரிமினல்ஸ், ஊழல்வாதிகள் போன்றவர்களை அரசியல் கட்சிகள் தேர்தலில் நிறுத்தாமல் இருப்பதற்கு போதிய அழுத்தத்தைக் கொடுக்கும் என்று விளக்கிக் கூறினார். வாக்குச் சீட்டு என்று சொன்னதற்கு காரணம் அப்போது எல்லாம் எலெக்ட்ரானிக் வோட்டிங் மெஷின் முழு அளவில் வரவில்லை. வாக்குச் சீட்டுக்கள் தான்தேர்தலில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்தப் பரிந்துரை அப்படியே கிடப்பில் போடப்பட்டிருந்தது.

### இந்திய தேர்தல் ஆணையம் எடுத்த முயற்சி!

இந்நிலையில் 2001 ஆம் ஆண்டில் இந்திய தேர்தல் ஆணையம் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது. இந்திய சட்டக் கமிஷன் சொன்ன நெகட்டிவ் வோட்டிங் முறையை அமல்படுத்த நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக் கொண்டது. இதே காலகட்டத்தில் உச்ச நீதிமன்றத்தில் வேறு ஒரு வழக்கும் இந்த நெகட்டிவ் வோட்டிங் முறையைக் கொண்டு வர வேண்டும் என்று தொடுக்கப்பட்டது. இதில் உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் வேறு ஒரு புதிய சிக்கல் உருவானது. அதாவது வாக்காளரின் வாக்குரிமை என்பது இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமையா? அல்லது அரசியல் சட்ட உரிமையா? அல்லது அது வெறு சட்டபூர்வ உரிமையா? என்ற கேள்வி பிறந்தது.

இதுபோன்றதொரு வழக்கில் முன்பு உச்ச நீதிமன்றம் வாக்காளரின் வாக்குரிமை அரசியல் சட்ட உரிமை என்று கூறியிருந்ததால் இந்த வழக்கை அரசியல் சாசன பெஞ்சிற்கு அதாவது ஐந்து நீதிபதிகள் கொண்ட பெஞ்சிற்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்படி நெகட்டிவ் வோட்டிங் கேட்டு தொடுக்கப்பட்ட வழக்கு 2009 ஆம் வருடம் இந்திய சுப்ரிம் கோர்ட்டின் அரசியல் சாசன பெஞ்சிற்கு மாற்றப்பட்டது.

### இந்திய சுப்ரீம் கோர்ட்டின் அதிரடி தீர்ப்பு!

அந்த வழக்கில்தான் சமீபத்தில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பில் பல முக்கிய அம்சங்களை கோடிட்டுக் காட்டியுள்ளது உச்சநீதிமன்றம். முக்கியமாக இந்திய ஜனநாயகத்தில் ஒரு வாக்காளரின் வாக்குரிமை சட்டபூர்வ உரிமைதான் என்பதை நிலைநிறுத்தியுள்ளது. அதை staturoy right என்று அழைக்கிறோம். அதே நேரத்தில் சட்டபூர்வ உரிமையை நிலைநாட்ட உச்சநீதிமன்றத்தை நாட முடியாது என்று வாதிட்ட மத்திய அரசின் வாதத்தை முறியடிக்க ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை எடுத்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான பெஞ்ச்.

எம்.காசிநாதன் (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது

## ஜெயலலிதா வலியுறுத்து

(சென்னை)

**இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது என்று பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.**

இது தொடர்பாக மன்மோகன் சிங்கிற்கு அவர் நேற்றுமுன்தினம் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் வலியுறுத்தியுள்ள விடயங்கள் வருமாறு,

பொதுநலவாய நாட்டில் இந்தியா கலந்துகொள்ளக்கூடாது என தமிழ் நாட்டில் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது.

எனவே தமிழ் மக்களின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இம்மாநாட்டை புறக்கணிப்பதன் மூலம் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் தரலாம் என்றும் அவர் அதில் கூறியுள்ளார்.

ஏற்கனவே மார்ச் மாதம் எழுதி அனுப்பிய கடிதத்தில், இலங்கை தமிழர்களின் உரிமைகளை பாது



காக்க இந்தியா முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன் என்பதையும் நினைவுபடுத்தியுள்ளார்.

இலங்கை அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல் குற்றங்களை செய்துள்ளது. பொதுநலவாய மாநாட்டு அமைப்புக்கான கொள்கைகளை இலங்கை நசுக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றால், அதன் அனைத்துக் குற்றங்களையும் இந்தியா ஏற்றுக்கொண்டதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிரான செயலாகவும் ஆகிவிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகம் சார்பில் அரசியல் கட்சிகளும் மாணவர்கள் அமைப்புகளும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

ஏற்கனவே மாநாட்டை புறக்கணிப்பதாக கனடா அறிவித்து விட்டது. அதனைத் தொடர்ந்து இந்தியாவும் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிப்பதாக உறுதியோடு அறிவிக்க வேண்டும் என்று அக் கடிதத்தில் மேலும் கூறியுள்ளார் ஜெயலலிதா. (அ-2)

# கசினோ சூதாட்டத்திற்காக 400 மில். டொலர் முதலீடு

## வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கசினோ விளையாட்டுக்காக 400 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை முதலிடப் போவதாக அவுஸ்திரேலிய கசினோ வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் ஊடாக சுற்றுலா பயணிகளுக்காக இந்த விளையாட்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பாக்கரை கோடிட்டு சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பேஹர வாவியை மையமாக வைத்து மேற்கொள்ளப்படவுள்ள இந்த வர்த்தகத்தின் மூலம் சுமார் 2 ஆயிரத்து 500 தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே இந்த கசினோ திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

இந்த திட்டத்துக்காக 450 அறைகளை கொண்ட சகல வசதிகளையும் கொண்ட ஐந்து நட்சத்திர ஹோட்டலின் அவசியம் குறித்து தாம் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாக பாக்கர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் இலங்கையின் நாடாளுமன்றமும் முதலீட்டு சபையும் தமது முதலீடுகளை ஏற்றுக் கொள்வது தொடர்பில் ஆராய்வை மேற்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 10 வருட விடுமுறை வரிச்சலுகை கொண்ட கசினோ உட்பட்ட கலவை அபிவிருத்தி திட்டம் ஒன்றுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக இலங்கையின் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# மனித உரிமை பேரவையின் பூகோள மீளாய்வு கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையின் 17 ஆவது பூகோள கால மீளாய்வுக்கூட்டத் தொடர் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடை பெறவுள்ள 17 ஆவது பூகோள கால மீளாய்வுக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி அட்டவணையில் இலங்கை விடயங்கள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை.

இம்முறை காலமீளாய்வுக் கூட்டத் தொடரில் செனகல், நைஜீரியா, சீனா, மெக்சிக்கோ, கொங்கோ, சாட் உள்ளிட்ட சில நாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளன.

இந்த நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்து மதீப்பீடு செய்வதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் தலா மூன்று நாடுகள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளன.

மேலும் சில நாடுகளுக்கு எதிராக கால மீளாய்வுக் கூட்டத் தொடரின் போது பிரேரணைகளும் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் கூட்டத் தொடர் ஆரம்பமாகி இரண்டாவது வாரத்தின் இறுதிப் பகுதியில் இந்த பிரேரணைகள் முன்வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மனித உரிமைப் பேரவையின் 16 ஆவது பூகோள கால மீளாய்வுக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)






சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வெள்ளைப் பிரம்பு தினம் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுன்னாகம் பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து ஊர்வலம் ஒன்று வாழ்வகம் வரை இடம்பெற்றது. ஊர்வலமானது சுன்னாகம் பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து ஆரம்பிப்பதையும் மாணவி ஒருவரின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# ஹலாலை முற்றாக ஒழிக்க மீண்டும் 22 இல் போராட்டம்

## பொதுபலசேனா குதிக்கிறது

(கொழும்பு)

இலங்கையில் ஹலாலை முழுமையாக ஒழித்துக் கட்டும் போராட்டத்தை மீண்டும் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப் போவதாக பொதுபலசேனா அறிவித்துள்ளது.

ஹலாலுக்கு எதிரான ஆர்ப்பாட்ட வாகனப் பேரணி எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் இருந்து கண்டி நோக்கி புறப்படவுள்ளதாகவும் பொதுபலசேனா தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொதுபலசேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அதன் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஹலால் உணவு வகைகளை சிங்கள மக்கள் உண்ணவேண்டிய அவசியமும் கிடையாது.

பௌத்த நாடான இலங்கைக்கு ஹலால் சான்றிதழுடனான உணவுப் பொருட்கள் அவசியம் இல்லை என்ற போராட்டதை நாம் முன்னெடுத்தோம்.

இதன் பின்னர் இச் சான்றிதழ் வழங்கப்படாது என முஸ்லிம் அமைப்புக்களால் உறுதி மொழிகள் வழங்கப்பட்டதோடு ஊடகங்களில் விளம்பரங்களும் பிரசுரிக்கப்பட்டன. ஆனால் உறுதி மொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

எனவே ஹலாலை முற்றாக ஒழிக்கும் போராட்டத்தை எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கின்றோம் என்றார். (அ-2)

# அரியாலை ஸ்ரான்லி அணி 58 ஓட்டங்களால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து களமிறங்கிய அரியாலை ஸ்ரான்லி அணி 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இவ் இறுதிச் சுற்று துடுப்பாட்டப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரான்லி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 187 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அதிகபட்ச ஓட்டங்களாக ராஜீவ்காந்-40, கண்ணராஜ்-30, குணதாஷ்-30, சுதர்சன் -21 என்ற ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.



பந்துவீச்சில் றொகான் 4 இலக்குகளையும் யசிந்தன், விஷ்ணு ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சுபாதி, அன்றூ ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றி யிருந்தனர்.

188 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்றல் அணி 24.5 பந்துப் பரிமாற்ற நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களையே பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்ச ஓட்டங்களாக ரஜீவ்குமார் 31 ஓட்டங்களையும் றொகான், கபிலன் ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் சென்றல் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக ராஜீவ்காந், உதய சுபேசன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் கஜதீபன், வசிகரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.

இறுதியில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்ட அரியாலை ஸ்ரான்லி அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றமும் உலக உணவு நாளும் நாமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இவ்வருடத்தினது மிக முக்கியமான நாளொன்றினை தற்போது கடந்திருக்கின்றோம். உலக உணவு நாள் ஒக்டோபர் 16 ஆகும். இந்த நாளைப்பற்றி எவரும் பெரிதாக அலட்டிக்கொண்டதாக தெரியவில்லை. ஆனால், இந்நாளை கொண்டாட வேண்டும் என்பதற்காக உலகத்து மக்களுக்கான உணவுற்பத்தி செய்வதற்கான கட்டளையாக இனங்கண்டு அதனை அடையாளப்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றது.

நினைவிலிருத்துவதும் பொருத்தமாகும்.


சிறியளவிலான விவசாயத்தை மெருகூட்டிக்கொள்வதில் உலகளவில் பெருமுயற்சியெடுத்திருக்கும் இவ்வேளையில் ஒவ்வொரு வீட்டிலும் உணவுற்பத்தியை ஊக்குவிப்பதில் அனைவரும் கருத்தொருமித்து குடும்பமொன்றிற்கான உணவுற்பத்தி வீட்டுத்தோட்டத்திலிருந்து வயற்பரப்பிற்கு விசாலமாக்கப்பட்டும் வயற்பரப்பிலிருந்து வீட்டுத்தோட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுமிருக்கின்றது. வீட்டுத் தோட்டத்தில் எமக்கான உணவினை நாமே

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... (35-I)

இந்நாளை கொண்டாடுவதென்பது அன்றைய தினத்திற்குரிய செயற்பாடாக மட்டும் மட்டுப்படுத்திக்கொள்ளாது தொடர்ந்து வரும் ஆண்டு காலப்பகுதியில் செய்ய வேண்டியவற்றை முன்கூட்டியே திட்டமிடவும் அதனை செயற்படுத்தும் வழிமுறைகளை இனங்காணவும் வழிவகுத்திருக்கின்றது. உலக மக்கள் அனைவருக்குமான உணவுற்பத்தி என்பது சாதாரண விடயமல்ல. உலக மக்களனைவரும் இணைந்து கூட்டுச்சக்தியாக அனைவருக்கும் உணவுற்பத்தி செய்வதாகும். இதன் வெற்றியே இனியொரு பசுமைப்புரட்சியின் வெற்றியுமாகும். விஞ்ஞான தொழில்நுட்பம் நாளொரு வண்ணம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் உணவுற்பத்தி பற்றிய கரிசனை அனைவருக்கும் எழுந்திருப்பதில் ஆச்சரியமில்லை. இருப்பினும் அனைவருக்கும் உணவு என்பது இன்னமும விடை காணாத வினாவாகவே இருக்கின்றது. அனைவருக்கும் உணவு என்பது வெறுமனே உணவுற்பத்தியை மட்டும் கருத்திற் கொள்ளவில்லை. மாறாக சத்தான முழு நிறைவான உணவு என்பதனையே சுட்டி நிற்கின்றது. இனியொரு பசுமைப்புரட்சிக்கு இன்னும் நிறைய வேலையிருக்கின்றது.

உலக உணவு நாளில் சிறியவிவசாயிகளையும் சிறியளவிலான விவசாயத்தையும் கருத்தில் கொள்ள பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றது. சிறுகச்செய்து பெரிதாக வாழ் என்பதன் அர்த்தமும் அதுதான். உணவுற்பத்திக்கான அறைகூவலை மீண்டும் இன்னொருதடவை விடுத்திருக்கின்றார்கள். உணவுற்பத்தி பலமடங்கால் உயர்த்த அழைக்கப்பட்டிருக்கின்றது. இன்னொரு பக்கத்தில் இது சாத்தியமா எனவும் பலமாக வினாக்கள் தொடுக்கப்பட்டிருக்கின்றது. வழக்கமான உள்ளீடுகளின்றி விவசாயஞ் செய்வது சாத்தியமாகுமா என்பதற்கப்பால் நாம் எதிர்பார்க்கின்ற விளைச்சல் உள்ளீடுகளதிகமின்றி கிடைக்கவும் தேவையான சாத்தியக்கூற்றினை ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள். சேதனவிவசாயத்தின் அவசியத்தை மீளவும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள நிலையில் அதற்கான பலமான அடித்தளத்தை நாம் மெல்ல மெல்ல இடவேண்டிய காலகட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதனை

உற்பத்தி செய்ய முடியும் என நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு காரணமுமுண்டு. எமக்கான உணவு நிறைவுணவாக, சத்துள்ள உணவாக, இன்னும் நஞ்சற்ற உணவாக நாம் உற்பத்தி செய்துகொள்வதற்கான தேவையே அது. நாம் உட்கொள்ளும் உணவில் அருந்தும் நீரில் வன்உலோகங்கள்




இருப்பது எமக்கான பாரிய பிரச்சினையாகும். இதனை மத்திய மாகாணத்திலுள்ள விளை நிலங்களில் வாழும் விவசாயிகளில் ஏற்பட்டுள்ள தீவிர சிறுநீரக நோயிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனால், இது போன்ற பிரச்சினை யாழ்ப்பாண மக்களிடையே குறிப்பாக விவசாய பெருமக்களிடையே தோன்றியிருப்பதாகவும் அறிய முடிகின்றது. காரணம் இதுவென சரியாக இனங்காணப்படாவிட்டாலும் விவசாயத்தில் அதிகளவில் பயன்படுத்தப்படும் பீடைநாசினிகள் முக்கிய காரணமாக இருக்கலாம் என மருத்துவ பீடாதி பதி கலாநிதி பாலக்குமார் தெரிவித்தார். பீடை நாசினிகளிலிருக்கும் வன்உலோகங்களின் செறிவு எமக்கு என்றுமே பாதிப்பையேற்படுத்தும். ஆனால், காலஞ்செல்ல செல்ல இவ்வாறான பக்க விளைவுகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திவிடும். இவ்விடயத்தை நாம் கவலையீனமாக விட்டுவிடக்கூடாது. இதுபற்றிய ஆய்வினை நடாத்தி சரியான காரணத்தைக் கண்டுபிடித்து மக்களுக்கு தெரிவித்து அதற்கான பரிகரணத்தையும் கண்டுபிடிக்க வேண்டும்.

இவையனைத்தும் ஒருபக்கத்தில் விவசாய செய்கையிலீடுபடும் விவசாய பெருமக்களுக்கு பாதகமானதாக இருக்கும் வேளையில் மறுபக்கத்தில் காலநிலை மாற்றலடைந்து எம்மை இம்முறை இக்கட்டான நிலைக்கு தள்ளியிருக்கின்றது. சரியான நேரத்தில் வரவேண்டிய மழை காலந்தாழ்த்தி இதனை எழுதும் போது ஆங்காங்கே பெய்வது போல இருப்பதும் போவதுமாக இருக்கின்றது. இது இம்முறை பயிர்ச் செய்கையில் பாரிய விளைவினை ஏற்படுத்த வழிகோலும். பருவம் தப்பி பயிர்செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு எம் விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், வரவேண்டிய மழை இன்னும் வரவில்லையாயின் அதனது வருகை வெள்ளத்தை ஏற்படுத்துமளவிற்கு இருக்கப் போகின்றது என அனுமானிக்கலாம். வெள்ள அனர்த்தம் ஏற்படுவதிலிருந்து அதனை தவிர்க்கவும் எம்மக்களை காப்பாற்றவும் இப்போதிலிருந்தே கவனமெடுக்க வேண்டும். பதிவான பகுதிகளில் வாழும் மக்களை அவர்களுக்கு பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துவதற்கான வழிகளை முன்கூட்டியே இனங்காணுதல் நல்லது. எதற்கும் வருமுன்காப்பதே சிறந்தது.

மழையின் தடுமாற்றத்துடனான காலந்தாழ்த்திய வருகையும் சீரற்ற மழைவீழ்ச்சியும் இம்முறை சோதனை நிறைந்ததாகவும் பிரச்சினைகளை உண்டுபண்ணுவதாகவும் அமைந்திருக்கின்றது. காலநிலை மாற்றத்திற்கான சிறந்த உதாரணமாக நாம் இதனைக் கொள்ளலாம். ஒருபக்கம் உணவுற்பத்தி பற்றி பேசிக்கொண்டு மறுபக்கம் காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை நாம் சந்திக்கத்தவறினால் நாம் எதிர்பார்த்த உணவுற்பத்தி கிடைக்காது. இங்கே காலநிலை பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சி தேவைப்படுகின்றது. வளிமண்டல திணைக்களத்தின் தகவல்கள் எமக்கு பக்கபலமாக இருப்பினும் இன்னும் காலநிலை மாற்றம் பற்றி எதிர்வுகூறல்களை துல்லியமாக அளந்தறிந்து விவசாயபெருமக்களுக்கு தினமும் அறிவிக்க ஆவன செய்யப்படல் வேண்டும். எங்களின் விவசாயத்தையும் விவசாயியையும் காப்பாற்ற இதனை அவசியம் செய்தல் வேண்டும். காலநிலை மாற்றம் பற்றிய ஆய்வுக்கான அடித்தளத்தை கிளிநொச்சியிலமையவிருக்கும் விவசாய பீடம் முன்னின்று செயற்படுத்த திட்டம் உள்வாங்கப்பட்டுள்ளது. இதற்கான உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றது. ஜப்பான் அரசாங்கத்தின் அனுசரணையுடனான ஜைக்கா (JICA) நிதிக்கான விண்ணப்பத்தில் இதனை கோரியிருக்கின்றோம். வளிமண்டல திணைக்களத்துடனிணைந்து காலநிலை மாற்றம் பற்றிய எதிர்வுகூறல்களை மாணவர்களுக்கு பயிற்றுவித்து மாணவர்களின் பங்களிப்புடன் இதனை நடைமுறைப்படுத்த வழிசெய்யப்பட்டிருக்கின்றது.

இம்முறை உள்வாங்கப்படும் புதிய மாணவர்களுடன் விவசாய பீடத்தின் செயற்பாடுகள் கிளிநொச்சியில் ஆரம்பமாகவிருக்கின்றது என்னும் முடிவை விவசாயபீடஅவை எடுத்திருக்கின்றது. விவசாய பீடத்தின் கிளிநொச்சி நோக்கிய நகர்வுக்கு அங்கு ஏற்பட்ட திருத்த வேலைகளின் தாமதம் முக்கிய காரணமாகும்.

யாழ்ப்பாணத்தில் இனியும் தொடர்ந்தியங்க முடியாத நிலையில் மாணவர்களுக்கான வசதிவாய்ப்புக்களை விரைந் தேற்படுத்தும் நோக்கில் இவ்வருடத்தில் கிளிநொச்சிக்கான பயணத்தின் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் வரவிருக்கும் புதிய க.பொ.த. உயர்தர தொழில்நுட்ப அலகிற்கு ஆசிரியர்களையும் மாணவர்களையும் தயார்ப்படுத்தவேண்டிய தேவையும் எழுந்துள்ளது. உயிர்முறைமை தொழில்நுட்பம் எனும் பாடத்திற்கு விவசாயம் கற்பிக்கும் ஆசிரியர்களை தயார்ப்படுத்தி வடமாகாணத்தில் விவசாய பாடத்தை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க கல்வித்திணைக்களத்துடனிணைந்து விவசாய பீடம் செயற்படும். 2015 ஆம் ஆண்டு விவசாய பீடத்தின் வெள்ளி விழா ஆண்டாகும்.

3.12.1990 ஆம் ஆண்டு விவசாய பீடம் மறைந்த பேராசான் அழகையா துரைரா ஜஜாவினால் கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் தனியார் வீடுகளில் கூனிக்குறுகி இருந்த விவசாய பீடம் தனது சொந்த நிலத்தில் கால்பதிக்கவிருக்கின்றது. மக்களின் விருப்பிற்கிணாங்க எமது பீடத்தின் செயற்பாடுகளை முடுக்கிவிட்டு கற்றல், ஆராய்ச்சி மற்றும் தகவல் பரிமாற்றம் என்பவற்றில் சிறந்து விளங்க விவசாயபீடம் முனைகின்றது.

நாம் எதிர்நோக்கும் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு எமது பிரதேசத்தை நாம் வளப்படுத்தவேண்டியது தற்போது எமக்குள்ள கடமைகளாகும். வாருங்கள் எம்மினிய உறவுகளே! உங்களின் பங்களிப்பும் இதில் ஒருங்கிணைந்தால் நாம் எதிர்பார்த்திருக்கும் அபிவிருத்தியை நோக்கி நாமனைவரும் முன்னகரலாம். இதுவே உலக உணவு நாளில் எமது திடசங்கற்பமாக கொண்டு செயலில் நிறைவு காண்போம்.

# தாய்லாந்தில் பயிற்சி பெறுவதற்கு பத்து வைத்தியர்கள் பயணிப்பர்

டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான பயிற்சிகளுக்காக இலங்கை வைத்தியர்கள் பத்து பேரை தாய்லாந்துக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவ்வார முடிவில் இவ் வைத்தியர்கள் தாய்லாந்து நோக்கி புறப்படவுள்ளனர்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின்படி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பத்து வைத்தியர்களை பத்து நாட்கள் பயிற்சித் திட்டத்திற்காக தாய்லாந்து அனுப்பவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காலி கராப்பிட்டிய, கொழும்பு சிறுவர் வைத்தியசாலை, களுபோவில வைத்தியசாலை, பேராதெனிய சிறிமாவோ பண்டாரநாயக்கா சிறுவர் வைத்தியசாலை, ராகம, பேராதனை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளிலிருந்து இந்த வைத்தியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# சூதாட்டத்திற்கு அதிக வரிச்சலுகை

## ஹர்ச டி எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கல்வி, சுகாதாரத்துறைக்காக ஒதுக்கப்படும் தொகையை விடவும் சூதாட்ட நிறுவனத்திற்கான வரிச்சலுகை அதிகமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்காக வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் தொகையை விடவும் சூதாட்ட நிறுவனத்திற்கான வரிச் சலுகை அதிகமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவுஸ்திரேலிய சூதாட்ட வர்த்தகரான ஜேம்ஸ் பார்க்கரின் நிறுவனத்திற்கு வருடாந்தம் 120 பில்லியன் ரூபா வரிச் சலுகை வழங்கப்படவுள்ளது.

35-40 மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியில் பாரியளவில் கசினோ சூதாட்ட மையமொன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் சுகாதாரத்துறைக்கு வரவு செலவுத்திட்டத்தில் 950 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கல்வித்துறைக்காக 121 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இயங்கி வரும் கசினோ சூதாட்ட மையங்கள் சட்டவிரோதமான முறையில் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தன்னாட்சி அவாவை நிறைவேற்றாது அரசாங்கம் இழுத்தடிப்பு



## மெயில் அன்ட் கார்டியன் ஊடகத்தில் ஜோன் போ்க்கி

அபிவிருத்தி என்ற போர்வையில் வடக்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் பிரிவினைவாத எண்ணத்தை நீக்குவதற்காக இலங்கை அரசாங்கானது, தனது காலத்தை இழுத்தடிப்தற்கான உத்தியைப் பயன்படுத்தி வருகிறது.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவப்படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததற்கான- இறுதிப்போரின்போது, தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு போர் மீறல்களை மேற்கொண்டிருந்தன. இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை பொறுப்பளிக்க வேண்டும் என அதன் மீது பல்வேறு அழுத்தங்கள் இடப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் பொதுநாலவாய அமைப்பின் உச்சிமாநாட்டை நடாத்துவது தொடர்பில் விவாதங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கமானது, சிறுபர்ன்மைத் தமிழ் மக்களுடன் இதய சுத்தியுடன் கூடிய அரசியல் மீளிணக்கப்பாட்டை அடைந்துகொள்வதற்கு மிகக் குறைவான முயற்சிகளையே மேற்கொண்டு வருவதாக விமர்சிக்கப்படுகின்றது. கொழும்பிற்கு மிகவும் பலமான ஒருசெய்தியை வழங்குவதானது தனிப்பட்ட ரீதியில் சிறந்தது என கமறூன் நம்புவதாக பிரித்தானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், கொழும்பில் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டை, தான் புறக்கணிப்பதாக கனேடியப் பிரதமர் தொடர்ந்தும் கூறிவருகிறார்.

பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடானது, மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை மேலும் பலப்படுத்தும்.

50 நாடுகள் இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொண்டுள்ளன, நாங்கள் தீண்டத்தகாதவர்கள் அல்லர் என, அனைத்துலக சமூகத்திடமும் உள்நாட்டு மக்களிடமும் இலங்கை அரசாங்கம் கூறிக்கொள்ள முடியும் என, கொழும்பைச் சேர்ந்த ஆய்வாளரும் செயற்பாட்டாளருமான பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், செப்ரெம்பர் இறுதிக்குள் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும் என மகிந்த ராஜபக்ச மீது அனைத்துலக சமூகம் அழுத்தம் கொடுத்ததாகவும், இதன் பெறுபேறாக 25 ஆண்டுகளின் பின்னர் முதன்முதலாக வடக்கு மாகாண சபையைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் மேற்கொள்ளப்பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் இலங்கையில் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, இந்த அபிவிருத்தியானது, தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கான கோரிக்கையை சிறித்ளவேனும் குறைக்கவில்லை என்பதை வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் கூறுகின்றன.

இலங்கை இராணுவத்தினர் வடக்கில் வாழும் மக்களின் நடவடிக்கைகளில் தலையீடு செய்வதாகவும், வடக்கில் அதிகளவில் இராணுவம் பிரசன்னமாகியிருப்பதாகவும், அரச வழங்களை இராணுவத்தினர் தவறாகப் பயன்படுத்துவதாகவும் பொதுநலவாய அமைப்பின் அவதானிகள் தெரிவித்த போதிலும் கூட, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வடக்கு மாகாண சபைக்கான 38 ஆசனங்களினில் 30 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது.

இலங்கையின் வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய எட்டு மாகாணங்களில், ரஜபக்சவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. வடக்கு மாகாணத்திடம் அரசியல் அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு இலங்கை ஜனாதிபதி, தனது எதிர்ப்பைக் காண்பித்துள்ளார். இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதற்குப் பதிலாக இங்கு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் இனப் பிரச்சினையை முதன்மைப்படுத்துவதை நிறுத்துமாறு இலங்கை அதிபர் தமிழ் மக்களிடமிருந்து உறுதிபெற விரும்புகிறார் என ஆளும் கூட்டணியின் யாழ்மாவட்ட அரசியல்வாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பாக சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அதாவது, வடக்கில் பல புதிய வாகனங்கள் இரண்டு தடவைகள் பதிவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கால்நடைகள் மற்றும் பல ஏக்கர் விவசாய நிலங்கள் போன்றனவும் 2011 இல் இரண்டு தடவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

போரின்போது பல இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்த போதிலும், தற்போது இவர்களின் வாழ்வியல் சிறிது முன்னேறியுள்ளது. மீள் குடியேறிய மக்களில் 63 சதவீதத்தினர், தமது [illegible] அமைத்திருக்கின்றார்கள். 25 பேரில் ஒருவர் தமக்கான நீரைப் பெற்றுக் கொள்வதற்காக 500 மீற்றருக்கு மேல் நடந்து செல்லவேண்டியிருப்பதாகவும், போரின் போது மூடப்பட்ட 160 இற்கும் மேற்பட்ட பாசாலைகள் தற்போது மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும் அகதி஌க்கான ஐ.நா. உயர் ஆணையகம் விடுத்த புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், சில தரவுகள் நம்பமுடியாதவையாக உள்ளன. அதாவது, சில இடங்களில் மக்கள் போதியளவு உணவைப் பெறமுடியாது தவிப்பதாக உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர். முன்னரைவிடத் தற்போது நிலமை மிகவும் மோசமாக உள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

தாம், கடனாக வாங்கிய பணத்தை திருப்பித் தரமுடியாத நிலையில் பலர் உள்ளனர் என, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொருளியல் ஆய்வாளரான அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். 18 மாதங்களின் முன்னர் எஸ்.சிவலிங்கம் என்பவர் முச்சக்கரவண்டி ஒன்றை வாங்குவதற்காக கடனாக 465 ஆயிரம் ரூபாவைக் கடனாகப் பெற்றிருந்தார். இவர் தற்போது, கிளிநொச்சி தொடருந்து நிலையத்திற்கருகில் தனது முச்சக்கர வண்டியை நிறுத்தியுள்ளார். தான், நாளொன்றுக்கு 700 ரூபாக்களை மட்டுமே வருவாயாகப் பெறமுடிவதாகவும் ஆனால், மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாக்களை கடனை அடைப்பதற்காகச் செலத்தவேண்டும் எனவும், தான் அடிக்கடி பட்டினியாக இருப்பதாகவும் முச்சக்கரவண்டியின் உரிமையாளர் தெரிவித்தார்.

அபிவிருத்தி என்கின்ற போர்வையில் வடக்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் தன்னாட்சி உரிமைக்காகப் போராடும் எண்ணத்தை நீக்குவதற்காக இலங்கை அரசாங்கமானது, தனது காலத்தை இழுத்தடிப்பதற்கான உத்தியைப் பயன்படுத்தி வருகிறது. விடுதலைப்புலிகளினதும் இறுதிக் கட்ட நடவடிக்கைகள், மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன.

ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டு, ஆறு மாதங்களின் முன்னர், போர் முடிவடைந்திருக்க வேண்டும். இறுதிக்கட்ட யுத்தத்தில் புரியப்பட்ட சாதனைகள் என தமிழர் தரப்பில் எதனையும் கூற முடியாது. ஆனால், இது ஒரு வரலாற்றுச் சம்பவமாகப் பதிவு செய்யப்பட்டு பரவலாக அறியப்படும் விடயமாக காணப்படுகிறது. போரின்போது உயிர்களைத் தியாகம் செய்த குடும்பங்கள்- சமுதாயம் அனைத்துக்கும் இது ஒரு வேதனைக்குரிய விடயமாகும் என, யாழ்ப்பாணத்தில் செயற்படும் முதன்மையான தமிழ் உரிமை ஆர்வலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அனந்தி சசிதரன், மே 2009 இல் படையினரின் சரணடைந்த பின்னர் காணாமற்போன தனது கணவர் தொடர்பாக அரசுக்கெதிராக குரல்கொடுத்து வருபவர். தான் மட்டுல்ல, பலர் தமது காணமற்போன கணவன்மாரைத் தேடுகின்றனர். பிறிதொரு ஆயுதப் போராட்டம் வேண்டாம். போரால் பல்வேறு துன்பங்களைச் சந்தித்தோம். ஆனால், விடுதலைப் புலிகளின் காலத்தில் நாம் மிகவும் சுதந்திரமாக வாழ்ந்தோம். ஆகவே, அரசியல் போராட்டம் தொடர வேண்டும் என அனந்தி சசிதரன் குறிப்பிட்டார். தமது பதவிகள் மிகவும் பலவீனமானவை என்பதை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்றுக்கொண்டனர். புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கு மிகக்குறைந்தளவு அதிகாரமே உள்ளது. தமிழ் மக்களின் கலாசார அடையாளம் மதிக்கப்பட வேண்டும். என்கிற கோரிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் சிறிதளவு மட்டுமே விருப்பத்தைக் காண்பித்துள்ளது. இலங்கையின் வடக்கில் மிகக் குறைந்தளவு படையினரே நிறுத்தப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணத்தில் உள்ள கட்டளைத் தளபதி ஒருவர் தெரிவித்த போதிலும், இங்கு இராணுவத்தினரின் பிரசன்னம் மிகவும் அதிகமாக காணப்படுகிறது.

இலங்கை இராணவத்தினர் நாட்டில் நிலைத்திருந்த *பயங்கரவாதத்தை* தோற்கடித்தனர் என்பதை சுட்டிக் காட்டும் விதமாக போர் வெற்றி நினைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறிலங்காவின் வடக்கில் மிகவும் அதிகமான நிலங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. கிளிநொச்சியைவிட்டு புலிகள் பின்வாங்கியபோது அவர்களால், வீழ்த்தப்பட்ட நீர்த்தாங்கியானது, இன்று சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் இடமாகக் காணப்படுகிறது. அத்துடன் போர் வெற்றிச்சின்னங்க்ள் விற்கப்படும் கடை, தபாலட்டைகள், பழச்சாறு போன்றன விற்கப்படும் கடை, என்பன கிளிநோச்சியில் உள்ளன. இதனைத் திறந்து வைப்பதற்கு சிறிலங்கா ஜனாதிபதியின் மகனும் இளைஞர் விவகார அமைச்சருமான நாமல் ராஜபக்ச கிளிநொச்சி வந்திருந்தார்.

இவ்வாறான சுற்றுலா மையங்களில் சிங்கள சுற்றுலாப் பயணிகள் ஒளிப்படங்களை எடுக்கின்றனர். இவர்கள் இலங்கை இராணுவத்தின் துணையுடன் இவற்றைப் பார்வையிடுகின்றனர். இதேவேளையில் பெரும்பாலான தமிழ் மக்கள் இங்கு அச்சுறுத்தப்படுகின்றனர்.

பயங்கரவாதம் என்பது, மோசமானது. இது எந்தநேரத்திலும் மீண்டும் தோன்றக் கூடியது என கண்டியைச் சேர்ந்த அரசாங்கப் பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள இடங்கள் எமக்கு கோபத்தையும் வருத்தத்தையும் ஏற்படுத்துகின்றன. இவை எமது அழகிய நாட்டை அழித்துவிட்டன. இவை எமது சமூகத்தை நிர்மூலமாக்கிவிட்டன. எமது நிலத்திலிருந்த வெற்றிச் சின்னங்களை சுற்றுலா மையங்கள் அழித்துவிட்டன. இப்பொழுது சுற்றுலா பயணிகள் எமது அழிவுகளை அனுபவிக்க வருகிறார்கள் போரால் வாழ்வியல் மாற்றமடைந்த மக்களாக நாம் வாழ்கிறோம். இதனை மாற்றுவதற்கு எதுவும் இடம்பெறவில்லை என, மாகாணசபை உறுப்பினரான அனந்தி சசிதரன் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டில் மனித உரிமை மீறலுக்கு எதிராக அழுத்தம் கொடுங்கள்

## சர்வதேச மன்னிப்பு சபை கோரிக்கை

(கொழும்பு)

**பொதுநலவாய நாடுகளின் இராஜதந்திரிகள், இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்பு சபை கோரியுள்ளது.**

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கான ஆயத்த குழுக்கூட்டம் கடந்த இரு தினங்கள் லண்டனில் நடைபெற்றது.

இந்நிலையில் பொதுநலவாய நாடுகள், இலங்கையில் மற்றும் பொதுநலவாய நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் முகமாக புதிய ஏற்பாடு ஒன்றுக்கு இணங்கவேண்டும் என்று மன்னிப்பு சபை கோரியுள்ளது.

இலங்கையில் சிவில் சமூகத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் சர்வதேச நிகழ்வுகளின் போதும் கூட மனித உரிமை பாதுகாவலர்கள் தாக்கப்படுகின்ற, அச்சுறுத்தப்படுகின்ற நிகழ்வுகள் இடம்பெறுகின்றன என்று மன்னிப்பு சபையின் ஆசிய பசுபிக் நிகழ்ச்சி பணிப்பாளர் பொலிட்ரஸ் கோட் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, பொதுநுலவாய நாடுகளின் மாநாடு கொழும்பில் நடைபெறும்போது அங்கு பிரசன்னமாகியிருக்கும் சர்வதேச மனித உரிமை பாதுகாவலர்களின் பாதுகாப்பு தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு அண்மையில் சென்று திரும்பிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்ற சம்பவங்களை குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இலங்கை சர்வாதிகார போக்கை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளதாக பொலிட்ரஸ் கோட் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அடுத்து வரும் இரண்டு வருடங்களுக்கு பொதுநலவாய நாடுகளின் தலைமையை இலங்கைக்கு வழங்கினால் அது பொதுநலவாய நாடுகளின் விழுமியங்களை தகர்க்கும் செயலாக அமைந்துவிடும் என்றும் ட்ரஸ்கோட் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஆதிவாசிகளின் கிரிக்கெட் விளையாட்டுக்கு அமைச்சர் எதிர்ப்பு

(கொழும்பு)

ஆதிவாசிகள் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்கு கலாசார அமைச்சர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஆதிவாசிகள் நாகரிகமடைவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என கலாசார அமைச்சர் ரீ.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆதிவாசி இளைஞர்கள் கிரிக்கெட் விளையாட விரும்புவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆதிவாசி கலாசாரத்தை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர்.

எதிர்காலத்தில் அம்புவில்லை கைவிட்டு காற்சட்டை அணிந்து நாகரிக சமூகத்துடன் இணைந்து கொள்வார்கள்.

ஆதிவாசிகளின் தலைவர் வன்னிலா எத்தோ கெப் வண்டியொன்றை கோரியுள்ளார்.

உலகின் வேறு எந்த ஆதிவாசித் தலைவருக்கும் வண்டிகள் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் ஆதிவாசி சமூகத்தினை இல்லாமல் செய்ய வழியமைக்கும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொதுநலவாய தலைவர்கள் உச்சி மாநாட்டை புறக்கணிப்போம்

## பொன்சேகா அறிவிப்பு

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை நிராகரிக்கப்போவதாக ஜன நாயகக் கட்சித் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் நடைபெறவுள்ளது. இந்த அமர்வுகளில் தமது கட்சி பங்கேற்கப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த அமர்வுகளினால் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை. இவ்வமர்வுகளை நடத்துவதன் நோக்கம் தரகுப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காகும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அமர்வு ஏற்பாடுகளின் மூலம் பாரியளவில் தரகுப் பணத்தைப் பெற்றுக் கொள்வதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது எனவும் இந்த அமர்வுகளினால் மக்களுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பயங்கரவாதம் ஏற்படுவதற்கான காரணத்தை கண்டறிய வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் அட்வைஸ்

(கொழும்பு)

பயங்கரவாதிகளை கொலை செய்வதனால் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்படமாட்டாது என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு ஏதுவான காரணிகளை கண்டறிந்து அதற்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். வெறுமனே தனிப்பட்ட பயங்கரவாதிகளை கொலை செய்வது பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

மாறாக வன்முறையில் ஈடுபடும் எண்ணிக்கை சுயேட்சை அடிப்படையில் அதிகரிக்கும். போதைப் பொருள் கடத்தல், கடற்கொள்ளை, ஆட்கடத்தல் போன்ற குற்றச் செயல்கள் பயங்கரவாதத்துடன் இணைந்த குற்றச் செயல்களாக மாற்றமடைந்துள்ளன.

பிராந்திய வலய நாடுகளின் ஒத்துழைப்பு மூலம் பயங்கரவாதம் மற்றும் ஏனைய திட்டமிட்ட குற்றச் செயல்களை தடுக்க முடியும். 27 ஆண்டுகள் இலங்கையில் போர் இடம் பெற்றது.

பயங்கரவாத நடவடிக்கைகளினால் நாட்டின் ஜனநாயக பொறிமுறைமைக்கு பாதகம் ஏற்பட்டிருந்தது. பல தசாப்தங்களாக போர் இடம்பெற்ற இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

சட்டம் ஒழுங்கு குறித்த ஆலோசனைகளை வெளிநாடுகள் பிரயோகிக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சிறீதரன் எம்.பிக்கு ராவணாபலய எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனை கொழும்பு வர விடமாட்டோம் என ராவணாபலய அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாண வாழ் சிங்கள மக்களை சிறீதரன் விரட்டினால் அவர் கொழும்பிற்கு வர அனுமதிக்க மாட்டோம். யாழ்ப்பாண மக்களை விரட்டி, கொழும்பு நாடாளுமன்றில் கடமையாற்ற அனுமதியளிக்க முடியாது.

வரலாற்றுக் காலம் முதல் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துள்ளனர். அவ்வாறான சிங்கள மக்களை அங்கிருந்து விரட்டுவது மிகவும் விரும்பத்தகாத செயலாகும்.

சிங்கள மக்களை விரட்டி வெட்கமின்றி கொழும்பு வர முயற்சிக்கின்றார் சிறீதரன். இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சிக்கும் அனைவருக்கும் எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சமாதானத்தை விரும்பினால் இவ்வாறான கருத்து வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராவணாபலய அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# சட்ட விரோத ஆட்கடத்தலுக்கு ஆயுள் தண்டனை கிடைக்கும்

## அறிமுகப்படுத்துகிறது பிரிட்டன்

(கொழும்பு)

பிரித்தானியாவில் சட்ட விரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு ஆயுள் தண்டனை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நவீன அடிமைத்துவ முறைமைகளை இல்லாதொழிக்கும் நோக்கில், புதிய சட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக பிரித்தானிய உள்துறைச் செயலாளர் திரேசா மே தெரிவித்துள்ளார்.

சட்ட விரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் 25 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அல்பானியா, போலந்து மற்றும் லித்துவேனியா போன்ற நாடுகளில் அதிகளவானவர்கள் இவ்வாறு பிரித்தானியாவிற்குள் கடத்தப்படுகின்றனர். பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி அடிமைப்படுத்தும் நோக்கில் அநேக சந்தர்ப்பங்களில் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதற்கும் கடுமையான சட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# வடமேல் மாகாணத்தில் 400 விகாரைகள் மூடப்படும்

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் இன்றி வடமேல் மாகாணத்தில் மட்டும் 400 விகாரைகள் மூடப்பட்டுள்ளன.

ரம்புக்கன திஸ்மல்பொல விகாரையில் 3 சிறுவர்களை துறவறத்தில் இணைத்துக் கொண்ட போது அங்கு உரையாற்றிய போதே தெல்தனிய ரதனசார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இரண்டு கோடிக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட இலங்கையில் அதிளவானவர்கள் பௌத்த மதத்தை பின்பற்றுக்கின்றனர். எனினும் இந்த மக்களுக்கு சேவையாற்ற 35 ஆயிரம் பௌத்த பிக்குகளே இருக் கின்றார்கள்.

அதிகளவான விகாரைகள் மூடப்படுவதற்கு பௌத்த பிக்குகள் போதியளவு இன்மையே காரணம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின், வழிகாட்டல் மற்றும் சேவைப் பிரிவினரால் நடத்தப்பட்ட உலக உளநல தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆற்றுகை செய்யப்பட்ட எங்களின் சிற்பிகள் நாடகக் காட்சியையும் கலந்து கொண்ட மாண வர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாகச்செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும்

## கூட்டமைப்புக்கு குமரன் பத்மநாதன் அறிவுரை

**(கொழும்பு) வடக்கில் பிரிவினைவாதம் பேசினால் சிங்களத் தீவிரவாதிகளும் பிரிவினையினையே கோரி நிற்பார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை அவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் சர்வதேசப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கூட்டமைப்பிற்கு வடக்கு மக்கள் கொடுத்த வாக்குகளானது ஒட்டு மொத்த தமிழர்களினதும் ஆதரவுக் குரல் என்பதனை சம்பந்தன் மறந்து விடக்கூடாது.

வடக்கையும் கிழக்கையும் இணைத்து தனி நாட்டை உருவாக்கலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைத்தால் அது ஒரு போதும் நிறைவேறப் போவதில்லை.

கூட்டமைப்பினர் பிரிவினைவாதம் பேசிக் கொண்டிருக்கும் வரையிலும் சிங்களத் தீவிரவாதிகளும் எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். இதனைப் புரிந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புத்திசாலித்தனமானதொரு அரசியலை செய்ய வேண்டும்.

வடக்கின் தமிழ், முஸ்லிம் மக்களை பாதுகாத்து நாட்டில் அவர்களுக்கெனவொரு அந்தஸ்தினை கொடுக்க வேண்டுமென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே சிறந்ததாகும். மாறாக தெற்கினை எதிர்த்துக்கொண்டு வடக்கில் ஆட்சியமைப்பதென்பது சாத்தியமற்ற விடயமே.

கடந்த கால அனுபவங்கள் எம் அனைவருக்கும் நன்றாகவே தெரிந்ததே. எனவே, அச்சூழலை மீண்டும் ஆரம்பித்து எஞ்சியிருக்கும் தமிழர்களையும் கொன்று விடக்கூடாது.

மேலும், சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பது தமிழர்களுக்காகவோ அல்லது வடக்கிற்காகவோ என நினைப்பது தமிழர்களின் முட்டாள்தனமேயாகும்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான விளக்கங்களையே சர்வதேசமும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்கு ழுவும் கேட்கின்றன.

அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றதை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டு தமிழர்களின் வாழ்க்கையோடு விளையாட நினைத்தால் அதன் பின் விளைவுகள் மிகவும் மோசமானதாகவே அமையும்.

அதேபோன்று கனடாவில் அதிகளவான புலம் பெயர் தமிழர்கள் வாழ்வதனாலும் அவர்கள் கனேடிய அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுப்பதன் காரணத்தினாலும் கனடா பொதுநலவாய மாநாட்டினை புறக்கணிக்கின்றது.

தற்போது கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள பதவிப் போராட்டம் தமிழ் மக்களை சலிப்படையச் செய்துள்ளது. தமிழ் மக்களினால் கிடைக்கப்பெற்ற வெற்றியினை சுயநலத்திற்காக பயன்படுத்தி சுகபோக வாழ்க்கையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனுபவிக்க நினைத்தால் அது அவர்களுக்கே எதிராக மாறிவிடும்.

பதவி ஆசையின் விளைவுகள், கடந்த கால வரலாறுகள் எமக்கு நன்றாகவே தெரிய வந்துள்ளன. அதை இன்றைய தமிழ், சிங்களத் தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்களின் தேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக ரீதியில் போராடி வெற்றி பெற்றால் அதை தமிழ் மக்க[illegible] ஏற்றுக் கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# "நாங்களும் பிறந்தது யாழ்ப்பாணத்தில் தானே?"

இன, மத, மொழி பேதமின்றி நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சகோரத்துவத்துடன் ஒற்று மையாக வாழ வேண்டும் என்று ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஏனைய சிங்களத் தலைமைகளும் மேடைகளில் உரத்த குரலில் கூறிவிட்டு மறைமுகமான நிகழ்ச்சி நிரலை வடக்கில் அரங்கேற்றி வரு கின்றமை புலப்படுகின்ற போதும் அதனைத்தடுக்க முடியாமல் தமிழர்கள் தவித்து வருகின்றனர்.

சிங்களக்குடும்பங்கள் அழைத்து வரப்பட்டு அரச காணிகள் மற்றும் தமிழர்களின் சொந்தக்காணிகளில் குடியேற்றப்படுவதும் இராணுவம் முகாம்களை அமைப்பதும், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தொடர்ந்து இடம் பெற்றுக்கொண்டிருக்கையில் அனைத்து இனமக்களும் சகோரத்துவத்துடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று கூறுவதனால் மட்டும் பயன் ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

வடக்கு மாகாணசபைத்தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வந்த காலகட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பொது மக்களின் வீடுகள் கணிசமான அளவு அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. தேர்தல் விதி முறைகளை மீறி இராணுவம் செயற்படுவதாக குற்றம் சாட்டப்பட்ட போதும் அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்து அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் பின்னர் அந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது என்பது வேறு கதை.

இவ்வாறிருக்க கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் வன்னி யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு விட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்த போதும் வடக்கில் பல குடும்பங்களில் ஆயுத மோதல்களைவிட மிகவும் மோசமான யுத்தமொன்று இடம்பெற்று வருகின்றது. வறுமை, குடும்பத்தலைவன் இல்லாத குடும்பங்களின் பாதுகாப்பு, வேலையில்லாப்பிரச்சினை என்று அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கையில் சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாத நிலையில் பல ஆயிரம் குடும்பங்களின் கோரிக்கைகளும் தொடர்கின்றன .

இதற்கிடையில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் காணாமல் போனவர்களும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டபின்பு காணாமல் போனவர்களும் எங்கே? என்று தேடி அலையும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களும் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஏங்கும் குடும்பங்களும் என இன்றும் வடக்கில் போர் ஓயாமல் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது.

இந்நிலையில் நாட்டில் நல்லிணக்கத்தையும் நிரந்தர சமாதானத்தையும் பாதுகாத்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்த்தெடுத்து மீண்டும் இந்த நாட்டில் ஆயுத மோதல்களும் உயிரிழப்புகளும் ஏற்படுவதை தவிர்க்க வேண்டிய அரசாங்கத்தரப்பினர், சிங்களமக்களின் குடியேற்றத்தை வடக்கில் பல பிரதேசங்களில் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் அரசகாணிகளில் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.



"நாங்களும் யாழ்ப்பாணத்தில்தான் பிறந்தோம், இங்கு தான் படித்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், "என்றும் யுத்தம் காரணமாகத்தான் தமது வீடுகள் எல்லாம் அழிவடைந்து விட்டதாகவும் நாவற்குழிப்பகுதியில் குடியேறிய சிங்கள மக்கள் சீற்றத்துடன் புதுக்கதையினை அவிழ்த்துவிட்டுள்ளனர்."

"தமிழர்களையும் சிங்களவர்களையும் மீண்டும் அடிபடவைக்க இந்த அரசாங்கம் திட்டமிட்டுவருகின்றது. இதற்கு சிங்கள மக்கள் பலியாகக்கூடாது என்று சுட்டிக்காட்டப்பட்டபோது தமிழர்களின் கைகளினால் இறக்கக்கூட தாம் தயாராக இருப்பதாகவும் யுதத்தால் பாதிக்கப்பட்ட தமக்கு யாரும் உதவி செய்ய வில்லையென்றும் கூறியுள்ளனர்"

தேர்தல் காலத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இடைநிறுத்தி வைத்திருந்த சிங்களக்குடியேற்றம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் யாழ். நாவற்குழி பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான காணிகள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையினை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் தேசிய வீடமைப்பு அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது.

அமைச்சர் விமல் வீரவன்சவின் கீழ் இயங்கும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் நாவற்குழியில் கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களக் குடும்பங்கள் குடியேற ஆரம்பத்திருந்தன.

சிங்களக்குடும்பங்களின் அத்துமீறிய குடியேற்றத்தை தடுத்து நிறுத்துவதற்கு பலர் முயற்சிகளை மேற்கொண்ட போதும் காலப்போக்கில் அந்த எதிர்ப்புகளும் செயலிழந்து போயின.

வடக்கில் பிறந்த பல தமிழர்கள் தமது குடும்பங்களுடன் தென்னிலங்கையில் குடியேற முடியுமென்றால் ஏன் தென்னிலங்கையில் பிறந்த சிங்களவர்கள் வடக்கில் குடியேற முடியாது என்று நியாயமான கேள்வியைதான் எழுப்புவதாக நினைத்து கொள்பவர்களும் எம்மிடையேயுள்ளனர்.

வடக்கில் பிறந்த தமிழர்களை அவர்களின் குடும்பங்களுடன் தென்னிலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் அரசாங்கம் குடியேற்றியதாக வரலாறில்லை.

அதுமட்டுமன்றி வடக்கிலும் சரி தெற்கிலும் சரி, அரச காணியில் தமிழர்கள் குடியேற்றப்பட்டதும் இல்லை. தென்னிலங்கையில் குடியேறிய தமிழர்கள் காணிகளை பணம் கொடுத்து கொள்வனவு செய்தே அங்கு குடியேறியுள்ளனர். இல்லாவிடில் தமிழர்கள் அங்கு குடியேறியிருக்க முடியாது.

தமிழர்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த சொந்த மண்ணிலேயே வாழ்வதற்கு தடைவிதித்து இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் என்று வேலி போட்டிருக்கும் இந்த அரசாங்கமா தென்னிலங்கையில் தமிழர்களைக் குடியேற்றி விடப் போகின்றது?

போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகவும் தாம் வாழ்ந்த மண்ணில் வாழ்வதற்கு அனுமதியளிக்க வேண்டும் எனக்கோரி போராட்டங்களில் வடக்கில் வாழும் தமிழர்கள் கண்ணீருடன் ஈடுபட்டு வரும் நிலையில் இந்த அரசாங்கம் இராணுவத்தின் ஊடாக சிங்களக்குடியேற்றங்ளை தமிழர்தாயகப் பகுதிகளில் ஏற்படுத்தி வருகின்றமை வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சுவதற்கு ஒப்பானது என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழரின் உரிமைகளும் சுதந்திரமும் பறிக்கப்பட்டு வரும் நிலையில் நாட்டில் நிரந்தர சமாதானமும் நல்லிணக்கமும் கேள்விக்குறியாகவே இருக்கும் என்பதை யாரும் மறுதலிக்க முடியாது.

நாவற்குழி உள்ளிட்ட வடக்கில் பல பகுதி களில் மேற்கொள்ப்பட்டு வரும் சிங்களக் குடும பங்களின் திட்டமிட்ட குடியேற்றங்களும் புத்தர் சிலைகளும், விகாரைகளும் இராணுவ முகாம்களும் இதற்கு தகுந்த ஆதாரமாகவுள்ளன. இனங்களுக்கிடையில் மோதல்களையும் பகைமை உணரவையும் வளர்த்து விடும் சுயநல அரசியல்வாதிகளின் பிடியில் சிங்கள மக்களும் அகப்பட்டு தமிழரின் விகி தா சாரத்தை குறைக்க கங்கணம் கட்டிக் கொண்டு அலைவது தான் வேதனைக்குரியது.

**எஸ். ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொகுசு வாழ்க்கைக்காக மக்களை வதைத்தெடுக்கிறது அரசாங்கம்

## ஐ.தே.க. ஊடக பேச்சாளர் கயந்த கருணாதிலக சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கைக்கு ஏனைய நாடுகள் அழுத்தம் கொடுப்பதை நாம் விரும்பவில்லை. பிரித்தானியாவின் கருத்தானது அவர்களின் சுயநலப் போக்கையே வெளிப்படுத்துகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.**

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறும் முன்னரே இலங்கை மிகவும் மோசமான நிலையிலுள்ளது. மாநாடு முடிந்த பின்னர் இலங்கையின் நிலை என்னவாகும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.


ஐக்கிய தேசியக்கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் கட்சியின் தலைமையக மான ஸ்ரீகொத்தாவில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்ட வாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத் துத் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு அழுத்தங்களை கொடுப்ப தற்காகவே பிரித்தானியா பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள் வதாக நேரடியாகவே குறிப்பிட்டுள்ளது. இக்க ருத்தின் மூலம் பிரித்தானியா தனது மோச மான எண்ணத்தினை குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் பல்வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில் அதனைத் தீர்க்காது தமது பழிவாங்கல்களை பூர்த்தி செய்து கொள்ளவே பிரித்தானியா முயற்சி செய்கின் றது.

இலங்கைக்கு தனிப்பட்ட ரீதியில் எந்த நாடுகளும் அழுத்தங்களை கொடுக்கக் கூடாது. அது அப்பாவி பொதுமக்களையே பாதிக்கும்.




மக்கள் வறுமையிலும் பொருளாதாரச் சிக்கல்களிலும் வாடும்போது அரசாங்கம் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டிற் கெதிராக கோடிக்கணக்கில் பணத்தை செலவிடுகின்றது.

மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காக குரல் கொடுக்கும்போது அரசாங்கம் மாநாடு களையும் ஏனைய கதைகளையும் கூறி மக்களின் வாயை அடைத்து விடுகின்றது.

இன்று இலங்கை வாழ்வாதார அடிப் படையில் மிகவும் பின்தங்கிய நாடாகவே உள்ளது. இந்நிலையில் கோடி ரூபாய்களை செலவழித்து பொதுநலவாய உச்சி மாநாட் டினை நடத்திய பின்னர், தற்போது மக்கள் படும் கஷ்டங்களைவிட பல மடங்கு வேத னைப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

அதேபோன்று இன்று அரசாங்கத்திற்குள் இழுப்பவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக அப்பாவி மக்களை துன்பத்தில் இடுகின்ற னர்.

அமைச்சுப் பதவிகளையும், சொகுசான வாழ்க்கையினையும் வாழ்வதற்காக அப் பாவி மக்களிடம் வரிகளையும், கடன் சுமை களையும் சுமத்தி மக்களின் பணத்தை கொள்ளையடிக்கின்றனர்.

மதகுருமாரிடம் சத்தியம் செய்துவிட்டு மறுபுறத்தால் கசினோ சூதாட்டத்தினையும், போதைப்பொருட்களையும் நாட்டிற்குள் அறிமுகப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். அதற்கான அங்கீகாரம் இன்னும் சில நாட்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எனவே, மக்கள் இவற்றை உணர்ந்து கொள்ளும் கட்டாய நிலைமை தேவைப் படு கின்றது. தமது வாழ்க்கைக்காகவும் எதிர் கால சந்ததியினருக்காகவும் மக்கள் போராட வேண டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# வர்த்தகரிடம் கப்பம் பெற முயன்ற மூவர் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பு, பொறளையிலுள்ள கோடீஸ் வர வர்த்தகர் ஒருவரிடமிருந்து கோடி ரூபா கப்பம் பெறுவதற்குமுயன்ற உப-பொலிஸ் பரிசோதகர், கான்ஸ்டபிள் மற்றும் யுவதி யொருவரையும் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரே நேற்றுமுன்தினம் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

கப்பம் பெற்றுக் கொண்டதாக கூறப்படும் கிருலப்பனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப-பொலிஸ் பரிசோதகர், பம் பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் மாத்த ளையை சேர்ந்த யுவதியையுமே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோடி ரூபா கப்பம் பெறுவதற்கு முயன்ற இவர்கள் 35 இலட்சம் ரூபாவை கப்பமாக பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

உப-பொலிஸ் பரிசோதகர் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சிறு முறைப்பாட்டு பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த போதே மூன்று மாதங்களுக்கு முன்னர் இவ்வாறு கப்பம் பெற்றுள்ளார்.

சந்தேகநபர்கள் முதலில் 35 இலட்சத்தை கப்பமாக பெற்றுக் கொண்டதாகவும் அதற்கு பின்னர் 70 இலட்சம் ரூபாவை கப்பமாக கோரிய போதே அது தொடர்பில் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்தே அவர்களை கைது செய்ததாகவும் கொழும்பு குற்றப்பு லனாய்வு பிரிவினர் தெரிவித்தனர். (அ-2)

# விவசாயிகளுக்கான கலந்துரையாடல்

இரணைமடுக்குளத்திலிருந்து கிளி நொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு குடிநீர் வழங் குதல் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட விவ சாயிகளுடனான கலந்துரையாடல், இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளி நொச்சி கரைச்சிப் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக் னேஸ்வரன், வடக்கு மாகாண நீர்ப்பாசன விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் , அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட விவசா யிகள் , புத்திஜீவிகள் , சிவில் அமைப்புக்களை யும் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-4)

# கொக்குவில் பொது நூலகத்தில் தேசிய வாசிப்புமாத போட்டிகள்

(கொக்குவில்)

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில் பொது நூலகத்தில் ஒக்டோபர் தேசிய வாசிப்புமாத போட்டி நிகழ்வுகள் எதிர்வ ரும் 20ஆம்திகதிஞாயிற்றுக்கிழமைதரம் ஒன்று முதல் 5 வரையான மாணவர்களுக்கும் மறு நாள் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியிலி ருந்து தரம் 6 முதல் 8 வரையான மாணவர் களுக்கும் நடத்தப்படவுள்ளது.

எனவே,போட்டிக்கு . விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் உரிய போட்டி தினத்தன்று சமுகமளிக்குமாறு கேட்கப்படுவ துடன் அறிவித்தல் கடிதம் கிடைக்காத மாண வர்களும் போட்டியின் போது சமுகமளிக்க லாம் என நூலகர் திருமதி பூ.பாலபாஸ்கரன் அறிவித்துள்ளார். (அ)

## சர்வதேச விமானங்கள்

# இரத்மலானையிலும் நிறுத்தி வைக்கப்படும்

(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அரச தலைவர்கள் பயணிக்கும் வெளிநாட்டு விமானங்களை இரத்மலானை விமான நிலையத்திலும் நிறுத்தி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேவை ஏற்பட்டால் மாத்திரமே, இரத் மலானை விமான நிலையத்தை பயன் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை தெரிவித் துள்ளது. (அ-2)

# மரண அறிவித்தல்

## செல்வன் ரவிகுமார் முகேஸ்குமார்



லண்டனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ரவி குமார் முகேஸ்குமார் அவர்கள் *12.10.2013* சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னர் ரவிக்குமார் (புன்னாலைக் கட்டு வன்) நளாயினி (வேலணை) தம் பதியரின் அன்பு மகனும் காயத்ரி, சஜீவ் ஆகியோரின் அன்புச் சகோ தரரும் சின்னையா (ஓய்வுபெற்ற அதிபர் யா/புன்னாலைக் கட்டுவன் மகா வித்தியாலயம் - கனடா) பூபதி (ஓய்வு பெற்ற ஆசிரியை - கனடா) காலஞ்சென்ற சண்முகராஜா அன் னலட்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் ராஜேஸ்குமார் (ராகவன் - லண் டன்) ஜெயகுமார் (கனடா), அம் பிகை குமார் (இந்தியா), நிமலகுமார் (கனடா). சதீஸ்குமார் (லண்டன்), தயாநிதி (பாரிஸ்), ஆகியோரின் அன்பு பெறாமகனும் பூமகள் (லண்டன்), இலகுநாதன் (Ken Travells Gana Tours வெள்ள வத்தை), வாமதேவன் (அதிப்ர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்) ஸ்ரீனிவாசன் (பாரிஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். (4301)

அன்னரின் ஈமைக்கிரியைகள் *20.10.2013* ஞாயிற்றுக்கிழமை மு.ப. *9.30* இற்கு St.Maryle bone crematorium (Part of east finchley cemetery) East End road London N2, ORZ United Kindom எனும் இடத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: திரு.ச.வாமதேவன் (அதிபர்)
109, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
021 2220108

திரு.கு.இலகுநாதன்
இல.32. நெல்சன் பிளேன்
வெள்ளவத்தை. 0112588119, 0112361024

உறவினர் புன்னாலைக் கட்டுவன் வடக்கு, புன்னாலைக் கட்டுவன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரணைப்பாலை கிராமத்தில் உள்ள 168 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை

(முல்லைத்தீவு)

**முல்லை மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரணைப் பாலை கிராமத்தில் 168 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றி மிகவும் கஷ்ட நிலையை அனுபவித்து வருகின்றன.**

கடந்த 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 417 குடும்பங்கள் மேற்குறித்த கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன.

இதில் 209 குடும்பங்களுக்கு 5.5 இலட்சம் ரூபா செலவில் நிரந்தர வீடு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

போரினால் சேதமாக்கப்பட்ட 40 வீடுகள் புனரமைப்புக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிதியும் இன்னமும் வழங்கப்படவில்லை. ஏனைய 168 குடும்பங்களும் நிரந்தர வீடுகள் இன்றி அல்லலுறுகின்றன.

இதில் ஐ.ஓ.எம் நிறுவனத்தினால் 175 தற்காலிக வீடுகளும் டி.ஆர்.சி நிறுவனத்தினால் 51 தற்காலிக வீடுகளும் அமைத்து கொடுக்கப்பட்டன.

40 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் கூட வழங்கப்படாமையால் மழையிலும் வெயிலிலும் மிகவும் கஷ்ட நிலையை எதிர்நோக்குகின்றனர்.

இதில் 1 – 3 அங்கத்தவர்களை கொண்ட குடும்பங்களும் கூடிய அங்கத்தவர்களை கொண்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட, பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கே நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை.



இங்கு 275 குடும்பங்களுக்கு மலசலகூட வசதியும் இல்லை. எனவே நிரந்தர வீடுகள் இன்றி அல்லலுறும் நமது நலனை கருத்தில் கொண்டு மழை காலத்திற்கு முன்னர் நிரந்தர வீட்டை அமைத்து தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## வவு.வில் விவசாயிகளுக்கு பயிர்ச் சிகிச்சை முகாம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட விவசாயிகளின் பயிர்ச் செய்கை தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து அவர்களது உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் பயிர்ச் செய்கை முகாம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சகிலாபானு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் நோய்தாக்கம் மற்றும் நவீன தொழில் நுட்ப முறைகள் தொடர்பாக பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக அவர்களது விளைச்சலின் அளவும் குறைவடைந்து அதை நம்பி வாழும் குடும்பங்களின் பொருளாதாரமும் பாதிப்படைந்துள்ளது.

எனவே, இப் பிரச்சினைகளை இலகுவாக தீர்க்கும் பொருட்டு மாதத்தின் முதலாவது வியாழக்கிழமை தொடக்கம் எமது பகுதியில் உள்ள 10 விவசாய போதனாசிரியர் பிரிவு களிலும் தொடர்ச்சியாக இந்த பயிர்ச் செய்கை முகாமினை நடத்தி வருகின்றோம்.

இதனடிப்படையில், நேற்று வவுனியா கோவில்குளம் கமநலகேந்திர நிலையத்தில் பயிர்ச் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. இதில் பல விவசாயிகள் கலந்து கொண்டுள்ளதாக அவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளது எனவும் தெரிவித்தார். (அ-250-266)

## பெண்கள் அரசியலை வலுவூட்டும் செயலமர்வு

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட சர்வோதய நிலையத்தில் பெண்களுக்கு அரசியல் வலுவூட்டல் செயலமர்வு இடம் பெற்றது.

சர்வோதய சிரமதான சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் மற்றும் தேசோதய சபை அங்கத்தவர்கள் மற்றும் கிராமமட்ட பாமர மக்களுக்கும் "பெண்கள் அரசியலில் உள்வாங்குதலுக்கான தூண்டுதல்" சிறப்பு செயலமர்வு மாவட்ட இணைப்பாளர் எஸ். உதயகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வவுனியா விவசாய திணைக்கள பணிப்பாளர் சகிலாபானு மற்றும் வவுனியா பொலிஸ் தலைமை பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி நெறியினை யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் S.புஸ்பகாந்தன், S.சிந்துஜன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு பெண்கள் தலைமைத்துவம் மற்றும் பெண்கள் அரசியல் தொடர்பான வளப்பகிர்வை வழங்கி பெண்களை வலுவூட்டினர். (ம-250-266)

## சிறுவனை துஷ்பிரயோகம் செய்த மதகுருவை கைது செய்யுங்கள்

### ஆனந்தன் எம்.பி கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா அட்டபகஸ்கட சிறுவர் இல்லத்தில் தமிழ் சிறுவனொருவன் பௌத்த மத குருவொருவரினால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டதாக சிறுவனால் வாக்கு மூலம் கொடுக்கப்பட்டதுடன் வைத்திய அதிகாரியினால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்ட நிலையிலும் சம்பந்தப்பட்ட மதகுரு கைது செய்யப்படாமை எமது நாட்டில் சிறுவர்களுக்குள்ள சட்டதிட்டங்களை கேள்விக்குட்படுத்தியுள்ளதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.



அட்டபகஸ்கட சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த 12 வயதுடைய நீலியாமோட்டையை சேர்ந்த சிறுவனொருவன் அப் பகுதி விகாராதிபதியால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டும் அவர் இதுவரை கைது செய்யப்படாமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாய் தந்தையரை இழந்த குழந்தைகளுக்கு சமூகத்தில் இருந்து போதுமான பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்ற நோக்குடனேயே சிறுவர் இல்லங்கள் உருவாக்கப்படுவதும் அதில் சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருவதுமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றது.

அட்டபகஸ்கட சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த சிறுவர்களை சிறுவர் தொடர்பில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பார்வையிடுவதற்கே அஞ்சும் நிலையிலேயே அச் சிறுவர் இல்லம் இயங்கி வந்தமையினால் அதன் காப்பாளரது இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடு இடம்பெற்றுள்ளது.

சிறுவன் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியமை தொடர்பில் போதுமான ஆதாரங்கள் இருந்தபோதிலும் சம்பந்தப்பட்ட மதகுரு தனது செல்வாக்கினை பயன்படுத்தி சட்டத்தின் முன்னால் தப்பித்துள்ளமையும் இது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் அசமந்த போக்கை கடைப்பிடிப்பதும் இலங்கையில் சிறுவர் சட்டங்களை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

1929 என்ற சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக முறைப்பாட்டு தொலைபேசி இலக்கங்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தப்பட்ட நிலையிலும் இம்முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸாரும் சிறுவர் தேசிய பாதுகாப்பு அதிகார சபையும் நடவடிக்கை எடுக்காமை வேதனைக்குரியதும் சிறுவர்களுக்கான பாதுகாப்பு தொடர்பில் அச்சம் கொள்ள வைத்துள்ளது.

அத்துடன் அது தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் மீது அங்கிருந்த சிலர் கற்களை வீசியும் தடிகளை கொண்டும் தாக்க முற்பட்ட போது அவர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக தப்பியுள்ளனர். எனவே இத்தனை சம்பவம் நடந்தும் மதகுரு கைது செய்யப்படாமை கண்டனத்திற்குரியது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-250-266)




## நேர்முகத்தேர்வு இன்று ஆரம்பம்

(பூந்தோட்டம்)

தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் கல்விமாணி பட்டக் கற்கை நெறியின் 2013 / 2015 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வவுனியா கற்கை நிலைய இணைப்பாளர் த.ம. தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

இந் நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்குமாறு 96 ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் கடிதங்கள் தாமதமாக கிடைத்தவர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை நேர்முகத் தேர்விற்கு தோற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ம-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளாதபோதும், பொறாமைப்படும்போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதிவிடுகிறான்.

*- சாக்ரடீஸ்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடபுலத்து அரச காணிகளை காணியற்றவர்களுக்கு வழங்குங்கள்

இனப்பிரச்சினைக்கான அத்தனை விவகாரங்களும் தனித்து அரச தரப்பினால் மட்டுமே ஏற்படுத்தப்பட்டது என்று சொல்வதை ஏற்க முடியாது.

மாறாக எங்கள் அதிகாரிகளிடம் இருந்த கஞ்சத்தனமான நிர்வாக மன நிலைகளும் எங்கள் இனத்திற்கு கிடைக்க வேண்டியவற்றை கிடைக்காமல் செய்தன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இத்தகைய மனநிலை உள்ள அதிகாரிகள் காரணமாக அரசு அறிவிக்கின்ற சலுகைகள், மானியங்கள் போன்றவை எங்கள் மக்களுக்கு கிடைக்காமல் போயிற்று. இதற்கு பலவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

மஹிந்த சிந்தனையூடாக அரச ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட சொத்துக் கடனை சிங்கள இனம் சார்ந்த அரச பணியாளர்கள் தாராளமாகப் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் வடபுலத்து அரச பணியாளர்களுக்கு இக் கடனைப் பெற்றுக் கொடுப்பதில் வட மாகாண நிர்வாகம் காட்டிய அசமந்தமும் வட புலத்தில் இயங்கும் அரச வங்கி அதிகாரிகளின் கடும்பிடியும் சொத்துக் கடனை எங்களவர்களுக்கு கிடைக்காமல் செய்தது.

இதுபோல தென்பகுதியில் தென்னம் செய்கையாளர்களுக்கு கிடைத்த மானியங்களும் இலகு கடன்களும் வடபுலத்து தென்னம் செய்கையாளர்களுக்கு கிடைக்காமல் போயிற்று.

இதுபோன்று பலவற்றைக் குறிப்பிட்டாலும் நாம் இங்கு முதன்மைப்படுத்திக் கூற வருவது, வட புலத்தில் உள்ள அரச காணி பற்றியதாகும்.

வட மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் பலர் காணி அற்றவர்களாக இருந்த போதிலும் அவர்களுக்கு அரச காணிகளை வழங்குவதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு பிரதேச செயலக ஆதிக்கத்திற்கும் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாக எல்லைக்குட்பட்டும் இருக்கக்கூடிய அரச காணிகளை காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கின்ற முயற்சி நடைபெற்றிருந்தால்,

குடியேற்ற வில்லங்கங்களைத் தடுத்திருக்க முடியும்.

எங்களால் செய்யக்கூடியவற்றை உடனடியாகவே செய்கின்ற நிர்வாகத் திறமை எங்களிடம் மந்தமாகவே இருக்கிறது.

இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

தமிழ் என்ற இன உணர்வோடு செயற்படுகின்ற அதிகாரிகளுக்கு இருக்கக்கூடிய பஞ்சமும் அவ்வாறான அதிகாரிகள் இருந்தாலும் அவர்களைக் காட்டிக் கொடுக்கின்ற கொடூரத்தனங்களும் எங்களால் எங்களுக்குச் செய்யக்கூடிய அதிகாரங்களையும் நாம் பயன்படுத்த முடியாமல் போயிற்று.

எனவே வடக்கு மாகாண அரசின் பணி நிலையில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

காணி அதிகாரம் யாரிடம் இருக்கின்றது என்ற கேள்விகளுக்கு அப்பால், அரச காணி ஒன்றை நிலமற்றவர்களுக்கு வழங்குவதற்கான சட்டப்பாடுகளை பின்பற்றி காணி அற்றவர்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இது விடயத்தில் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் காத்திரமான ஒத்துழைப்பை வழங்குவது அவசியம்.


காணியற்ற வட பகுதித் தமிழ் மக்களுக்கு தென்பகுதியில் ஒரு போதும் அரச காணி கிடைக்கப் போவதில்லை. அதேநேரம் தென்பகுதியில் காணியற்றவர்களுக்கு தென்பகுதியில் இருக்கக்கூடிய அரச காணிகளை வழங்குவதில் எந்தத் தடையும் இருக்க முடியாது.

ஆக, வடபகுதியில் காணியற்ற தமிழ் மக்கள் இருக்கும்போது தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் வட பகுதிக்கு வந்து அரச காணிகளுக்கு உரிமை கோருவது அல்லது அரச கட்டடங்களில் குடியிருப்பது ஆகியன எந்த வகையிலும் நியாயமாகாது.

அதேநேரம் வடபுலத்தில் நடந்த விடுதலைப் போராட்டத்துக்கு முன்பாக இங்கு குடியிருந்த தென் பகுதி மக்களுக்கு அவர்கள் குடியிருந்த நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதும் நியாயமானதாகும்.

இத்தகைய நியாயப்பாடுகளுடன் காணியற்ற வட பகுதி மக்களுக்கு வடக்கில் அரச காணி வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும்.

# சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில் 'சைவப்புரவலர்' பட்டம் பெறும் சான்றோர்



திருமிகு சி. வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர், வலம்புரி பத்திரிகை)

சிவஞானம் மீனாட்சி தம்பதிகளுக்கு 1951ஆம் ஆண்டு அவதரித்த வெற்றிவேலாயுதம் அவர்கள் இளமைக்கல்வியை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலும் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றார். தொடர்ந்து உயர் கல்வியை பொரளை சுக்குவினஸ் பல்கலைக்கழகத்தில் கற்று கணக்கியல் பட்டம் பெற்றார்.

கொழும்பில் பல நிறுவனங்களுக்கு நிதி, வருமான வரி ஆலோசகராக கடமை ஆற்றினார். 1999இல் கார்த்திகை மாதம் யாழ்ப்பாணத்தில் வலம்புரி எனும் தினசரிப் பத்திரிகையை ஆரம்பித்து தமிழுக்கும் சைவத்திற்கும் பலதொண்டுகள் ஆற்றிவருகின்றார்.

சைவசமய வாழ்க்கை வாழ்ந்து வரும் இவர்கள் சி.செல்வராணியை கைத்தலம் பற்றி இல்வாழ்வு வாழ்ந்து வருகின்றார். இலங்கைத் திருக்கோயில்கள் மட்டுமன்றி இந்தியாவில் காசி, கேதாரம், பத்திரிநாத் போன்ற சிவத்தலங்களுக்கு யாத்திரை செய்து வருவதோடு வருடாவருடம் ஆனி உத்தரத்தன்று தில்லைச் சிற்றம்பலத்தில் நடேசப்பெருமான் அபிஷேகம், திருவுலாக் காட்சியையும் தரிசித்து வருகின்றார். யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களில் திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளார். எமது சங்கத்தின் வளர்ச்சிக்கும் உதவி வருகின்றார்கள்.

* * *



இ.ச.பே.நாகரத்தினம் (உரிமையாளர் இ.ச.பே. நாகரத்தினம் அன் கோ, கஜமுகன் ஹாட்வெயார்– யாழ்ப்பாணம்)

1956ஆம் ஆண்டு காரைநகர் வாரிவளவு பேரம்பலம் மாணிக்கம் தம்பதிகளுக்கு சிரேஷ்ட புத்திரனாக அவதரித்தார். இளமைக் கல்வியை யாழ்ற்றன் கனிஷ்ட பிரிவு கல்லூரியிலும் தொடர்ந்து யாழ்ப்பாணம் வண்ணை சைவ சன்மார்க்க வித்தியாசாலையிலும் கற்றுக் கொண்டார். தொடர்ந்து தந்தையின் வழியில் இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தில் இணைந்து வியாபாரத்தை சிறப்பாக செய்து வந்தார். காரைநகர் தங்கமலரைத் திருமணம் செய்து 5 புத்திரர்களையும் பெற்று சைவசமய பாரம்பரியத்தில் வளர்த்து கல்வியினால் முன்னேற்றம் பெறச் செய்தார்.

தொடர்ந்து கஜமுகன் ஹாட்வெயர நிறுவனத்தை ஆரம்பித்து சிறப்புற நடத்தி வருகின்றார். காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் திருப்பணி, ஆலய உற்சவங்கள் போன்றவற்றுக்கு பெரும்பங்காற்றி வருகின்றார். ஈழத்து சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயத்தின் அன்னதானப் பணியை பல்லாண்டுகளாக சிறப்பாக நடத்தி வருவதோடு 2007 ஆண்டுமுதல் ஆயுட்கால தலைவராகவும் விளங்கி வருகின்றார்.

இவற்றைவிட யாழ்.குடாநாட்டில் பல ஆலயங்களின் திருப்பணிக்கு பங்காற்றி வருகின்றார். ஏழைச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு மாதந்தோறும பேருதவி செய்து வருகின்றார்கள்.

இத்தோடு பாடசாலைகள், பல்கலைக் கழகம், கல்வியியற் கல்லூரி, சைவசமய நிறுவனங்கள் எனப் பலவற்றின் செயற்பாடுகளுக்கும் நிதியுதவி செய்துவருகின்றார். யாழ்ப்பாணம் தேசியகல்வியற் கல்லூரி இவரது சேவையைப் பாராட்டி "கல்விக் காருண்யன்"பட்டம் வழங்கியது. இலங்கை செஞ்சிலுவை சங்கம் "மனிதநேய ஈகையாளன்" எனும் பட்டம வழங்கிக் கௌரவித்தது. "பொன் மலர்ச் செம்மல்"எனும் பட்டத்தினை யாழ்ப்பாணம் சைவ சன்மார்க்க வித்தியாலயம் வழங்கியுள்ளது.

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவராகவும் 2012 - 2013இல் தலைவராகவும் இருந்து நற்பணி யாற்றி வருவதோடு லயன் இ.ச.பே. நாகரத்தினம் PMJF என நாமமும் சூட்டியுள்ளார்கள். எமது சங்கப் பணிகளுக்கும் உதவியாற்றி வருகின்றார்.

**சைவபரிபாலனசபை-யாழ்ப்பாணம்.**

## உணவு பரிசோதனைக்கு குழு நியமிக்கப்பட்டது

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தரவுள்ள தலைவர்களுக்கு வழங்கப் படவுள்ள உணவுகளை பரிசோதனை செய்யும் பொருட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கென 9 பேர் அடங்கிய குழுவொன்றை கொழும்பு மாநகர சபை நியமித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இக்குழுவானது தலைவர்கள் தங்கவுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தமது பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

அடுத்த வாரம் முதல் மேற்படி குழுவானது உணவு பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. (அ-2)

## இலங்கை மீனவர்கள் 89 பேருக்கு விளக்கமறியல்

(திருகோணமலை)


சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 89 பேரையும் நாளை மறுதினம் திங்கட் கிழமை வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை பதில் நீதவான் திருச்செந்தில்நாதன் உத்தர விட்டுள்ளார்.

திருகோணமலை கடற்பரப்பில் வைத்தே இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இந்த 89 பேரையும் நீதவான் முன்னிலையில் நேற்றைய தினம் ஆஜர்படுத்தியபோதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இவர்களிடமிருந்து 13 படகுகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



இது மனமே இல்லாத நிலையல்ல. மனம் என்பது நம்பிக்கைகள், நோக்கங்கள், சிந்தனைகள், சமுதாயக் கட்டுப்பாடுகள், பாதிப்புகள், பிள்ளைப்பிராய முடிவுகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த மனதே நமது விருப்புகளுக்கு உட்படாது நமது வாழ்வைக் கட்டுப்படுத்துகிறது. ஆகவே நாம் முடிவையும் எடுக்கமுடியவில்லை. இந்த மனதின் வட்டத்திற்கு வெளியில் எதையும் சிந்திக்க முடியவில்லை. ஆகவே, நாம் நமது சொந்தச் சிறையிலேயே அடைபட்டு விடுகிறோம். மனதிலிருந்து விடுதலை என்றால், மேலே கூறப்பட்டவைகளின் கட்டுப்பாட்டில் இனியும் நாம் இல்லை. மாறாக நாமே அவற்றைக் கட்டுப்படுத்துகிறோம். இந்த விடுதலை மிகப் பெரியதொரு சுதந்திரத்திற்கு இட்டுச் செல்லும். எடுத்துக்காட்டாக நமது நண்பர்களிடத்தில், உறவினர்களிடத்தில், மனைவியிடத்தில் நாம் ஏன் இவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறோம் என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. நமது நடத்தை நமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை. நாம் இயலாத நிலையில் உள்ளோம். நமது இத்தகைய நடத்தைகளைப் பற்றிய நமது இயலாத உணர்வுக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் உள்ளன. இவையாவும் நமது கட்டுப்பாடற்ற மனதினால் ஏற்பட்டவையே. மனதின் பிடியிலிருந்து நீங்கள் விடுதலையடைந்த உடனேயே உங்களது மகிழ்ச்சி வேறு விதமானதொரு பண்பைக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நல்லதைப் பேசுங்கள்!



✡ உலக இயந்திரத்தின் சக்கரங்களில் இருந்து தப்பி ஓட நினைக்காதீர்கள். அதன் உள்ளே நின்று கொண்டு கடமையை செய்து கர்மயோகத்தின் இரகசியத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்.

✡ சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வை திருத்தி அமைத்துக் கொள்வது தான் வெற்றிகரமான வாழ்விற்குரிய முழுமையான இரகசியம்.

✡ பிரதிபலன் எதையும் எதிர்பார்க்காமல், உலகிற்குச் செலுத்தும் ஒவ்வொரு நல்லெண்ணமும், நமது கர்மச் சங்கிலி இணைக்கும் கண்ணி ஒன்றை உடைத்து எறிகிறது. இதனால் பிறவித்தளை அறுபடுகிறது.

✡ எப்போதும் புனிதமான நல்ல எண்ணங்களைச் சிந்தியுங்கள். பிறருக்குப் பயன்படும் நல்ல விடயங்களைப் பேசுங்கள். நல்ல பணிகளில் ஈடுபட்டு உலகிற்கு நன்மை செய்யுங்கள்.

✡ சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒன்றாக விளங்கினால் உலகையே ஆட்டி வைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அதிரடி வீரர் கோஹ்லி ஆஸி. உடனான ஆட்டத்தில் உருவாக்கினார் சாதனைகளை

ஜெய்ப்பூரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் விராட் கோஹ்லி வீரேந்தர் ஷேவாக்கின் இரண்டு சாதனைகளை முறியடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்தியா தோல்வி அடைந்தது. இந்நிலையில் ஜெய்பூரில் உள்ள சவாய் மான்சிங் விளையாட்டரங்கில் இரண்டாவது ஒரு நாள் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் இந்தியா அசத்தலாக விளையாடி வெற்றி பெற்றது. இப்போட்டியின்போது சிறப்பாக விளையாடிய விராட் கோஹ்லி வீரேந்தர் ஷேவாக்கின் இரண்டு சாதனைகளை முறியடித்துள்ளார்.

முதல் சாதனை முறியடிப்பு ஒரு நாள் போட்டியில் ஷேவாக் 60 பந்துகளில் 100 ஓட்டங்கள் அடித்ததே இதுவரை சாதனையாக இருந்தது. இந்நிலையில் 52 பந்துகளில் கோஹ்லி 100 ஓட்டங்களை எடுத்து ஷேவாக்கின் சாதனையை முறியடித்தார்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 15 சதங்கள் அடித்து சச்சின் டெண்டுல்கர்(49) மற்றும் சவ்ரவ் கங்குலியை(22) அடுத்து அதிக சதங்கள் அடித்த வீரராக ஷேவாக் இருந்தார். ஆஸி உடனான சதத்தை சேர்த்து




கோஹ்லி சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் மொத்தம் 16 சதங்கள் அடித்துள்ளார். இதையடுத்து ஷேவாக்கின் சாதனையை முறியடித்து அவரின் மூன்றாவது இடத்தை கோஹ்லி பிடித்துவிட்டார்.

சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் ஒரு இந்திய வீரரால் மிக விரைவாக எடுக்கப்பட்ட சதம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷேவாக் 251 சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 15 சதங்கள் அடித்திருந்தார். ஆனால் கோஹ்லி 115 போட்டிகளில் விளையாடி 16 சதங்கள் அடித்துள்ளார்.

## கோஹ்லியின் ஆட்டம் வியப்புக்குரியதாக இருந்தது; பெய்லி



அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஜெய்ப்பூரில் நடைபெற்ற 2ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 360 ஓட்டங்கள் இலக்கை 43.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து எட்டிப்பிடித்து பிரமிக்க வைத்தது. இதில் 52 பந்துகளில் சதம் விளாசி அதிவேகமாக சதம் அடித்த இந்தியர் என்ற சிறப்பை பெற்ற விராட் கோலிக்கு இது 16ஆவது சதமாகும்.

இவற்றில் வெற்றிகரமாக இலக்கை "சேசிங்" செய்ததில் கோலியின் பங்களிப்பு 10 சதங்கள் ஆகும்.

தோல்விக்கு பின் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஜார்ஜ் பெய்லி அளித்த பேட்டியில், "விராட் கோலி சந்தித்த முதல் பந்தில் இருந்தே அடித்து நொறுக்கினார். அதே நேரத்தில் அவர் விக்கெட்டையும் பாதுகாத்து கொண்டார். இதனால் ஆட்டத்தை எங்கள் பக்கம் திருப்ப முடியாமல் போய்விட்டது. அடிப்படையில் கோலி, தவான், ரோகித் ஷர்மா மூன்று பேரின் துடுப்பாட்டமும் வியப்புக்குரிய வகையில் இருந்தது. என்றாலும் விராட் கோலி களம் இறங்கிய பிறகு தான் ஆட்டம் எங்களது கையை விட்டு போய் விட்டது என்றார்.

## ஐ.சி.சி. கூட்டம் இன்று

சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட்டம் லண்டனில் இன்று தொடங்கி 2 நாட்கள் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் இந்தியா சார்பில் பி.சி.சி.ஐ தலைவர் சீனிவாசன் கலந்துகொள்கிறார்.

சீனிவாசன், பிசிசிஐ தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கலந்து கொள்ளும் முதல் ஐ.சி.சி கூட்டம் இது வாகும். அடுத்த ஆண்டு நடைபெறவிருக் கும் ருவெண்ரி-20 போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என ஐசிசி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

International Cricket Council

## ஆஸி. அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக மெக்டர் மாட்


டெஸ்ட் போட்டிகளுக்கான அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக முன்னாள் நட்சத்திரம் கிரெய்க் மெக்டெர் மாட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2011-12ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக செயற்பட்டவர் கிரெய்க் மெக்டெர்மாட்.


இவரது பயிற்சியின் கீழ் அவுஸ்திரேலிய வேகங்கள் பீட்டர் சிடில், ஜேம்ஸ் பேட்டின் சன், மிட்செல் ஸ்டார்க், ரியான் ஹாரிஸ் ஆகியோர் மிகச் சிறப்பாகப் பந்துவீசி அசத்தி வந்தனர்.

இந்நிலையில் தனது சொந்த காரணங்களுக்காக பொறுப்பில் இருந்து விலகவே, டெக்டெர்மாட் விலகினார். இதனை தொடர்ந்து மீண்டும் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சொந்த மண்ணில் நடக்கவுள்ள ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துடன் மோத உள்ள நிலையில், பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளது பந்துவீச்சாளர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.



## சச்சினுக்காக 20 துடுப்பு மட்டைகளை செய்து வழங்கினார் பண்டாரியோ



சச்சின்தனது 200ஆவது டெஸ்ட்போட்டியை மும்பை வாங்கடே மைதானத்தில் விளையாடவுள்ளார். இப்போட்டியில் சச்சின் சதம் அடிப்பாரா என்ற எதிர்பார்ப்பில் ரசிகர்கள் உள்ளனர். இதுகுறித்து பெங்களூர் பண்டாரியோ, 300, 400 ஓட்டங்களைக் குவித்து லாராவின் உலக சாதனையை சச்சின் முறியடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

சச்சினுக்காக 20 துடுப்பாட்ட மட்டைகளைத் தயாரித்தும் 20இற்கும் மேற்பட்ட துடுப்பாட்ட மட்டைகளை சீர்செய்து புதிதாக வடிவமைத்தும் கொடுத்தவர் இந்த பணடாரி.

சச்சின் குறித்து பண்டாரி கூறுகையில்,

கிரிக்கெட் ஒரு சிறந்த விளையாட்டு. எது வேண்டுமானாலும் இதில் நடக்கலாம். யாராவது ஒருநாள் போட்டியில் இரட்டை சதம் அடிப்பார்கள் என்று நாம் நினைத்தோமா.. ஆனால் சச்சின் அதைச் செய்தார். எனவே 400 ஓட்டங்களை கடைசி டெஸ்ட் போட்டியில் அவர் எடுக்கக் கூடாது என்று எப்படி நாம் நினைக்கலாம். நிச்சயம் அதை சச்சினால் செய்ய முடியும் என்றார் அவர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சச்சின் எனக்கு நல்ல உறவு உள்ளது. 2004இல் இது தொடங்கியது டிராவிட்தான் என்னை டெண்டுல்கரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். அது முதல் அவரது துடுப்புகளை நான்தான் சரி செய்து கொடுத்து வருகிறேன் என்றார் பண்டாரி.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு போட்டியில் டெண்டுல்கரின் துடுப்பு அதிக எடையுடன் இருப்பதை சுட்டிக் காட்டிய பண்டாரி எடையைக் குறைக்குமாறு ஆலோசனை கூறினார். அதைத் தொடர்ந்து 1350 கிராம் என்ற எடையிலிருந்து 1250 கிராமாக தனது துடுப்பின் எடையைக் குறைத்துக் கொண்டாராம் சச்சின். எடையைக் குறைத்த பின்னர் மலேசியாவில் நடைபெற்ற போட்டியில் 157 ஓட்டங்களை விளாசினார் சச்சின். அதன் பிறகு அவர் இனிமேல் 1250 கிராம் எடையிலேயே துடுப்பு தயாரிக்குமாறு என்னைக் கேட்டுக்கொண்டார் என்றார்.

டிராவிட், ஷேவாக், விராத் கோஹ்லி, கம்பீர், சட்டேஸ்வர் புஜாரா, சுரேஷ் ரெய்னா, இர்பான் பதான் என பல முன்னணி வீரர்களின் துடுப்புகளில் இவரது கைவண்ணம் இடம் பெற்றுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரி வினாத்தாள் கருத்தரங்கு

# க.பொ.த. சா/த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

மத்திய கல்வி அமைச்சின் அனுசரணையுடன் யாழ்.கல்வி வலயத்தினால் நடத்தப்படும் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை குறிப்பிட்ட நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இவ் ஐந்து நாட்களும் முறையே தமிழ் மொழியும் இலக்கியமும் மற்றும் சிங்கள மொழியும் இலக்கியமும், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இதன்படி யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யா/மத்திய கல்லூரி, யா/சென் ஜோன்ஸ் கல்லூரி, யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யா/இந்துக் கல்லூரி, யா/திருக்குடும்ப கன்னியர்மடம், யா/புனித பத்திரிசியார் கல்லூரி, யா/இந்து மகளிர் கல்லூரி, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்குகள் அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

மேலும் யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், யா/பாசையூர் புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலை, யா/கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும்,

யா/ஒஸ்மானியா முஸ்லிம் கல்லூரி, யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யா/சன்மார்க்க மகா வித்தியாலயம், யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம், யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம் ஆகிய மாணவர்களுக்கு யா/சன்மார்க்க மகாவித்தியாலயத்திலும் மேற்படி கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், யா/புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை, யா/புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை மாணவர்களுக்கு யா/புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையிலும், யா/புனித மரியன்னை மகாவித்தியாலயம், யா/புனித றோச்சஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு யா/புனித மரியன்னை வித்தியாலயத்திலும் யா/செங்குந்தா இந்துக் கல்லூரி, யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், யா/கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம், யா/கோண்டாவில் பரம்சோதி வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யா/பெரியபுலம் மகாவித்தியாலயம், யா/உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்கலவன் பாடசாலை, யா/கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்திலும்,

யா/அரியாலை சிறிபார்வதி வித்தியாலயம், யா/கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம், யா/நல்லூர் தெற்கு ஸ்ரீசைவப் பிரகாச வித்தியாலயம், யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, யா/நல்லூர் சி.சி.த.க. பாடசாலை, யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் இக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

மேற்படி மாதிரி வினாத்தாள் கருத்தரங்கின் மூலம் யாழ்.வலயத்துக்குட்பட்ட 2557 மாணவர்கள் வரையில் பயன்பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

# மகிந்தன் வெற்றிக் கிண்ணம் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் மகிதரன் நடத்தும் மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர் கொண்ட மின்னொளியிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிநேகபூர்வமாக மோதவுள்ளது.


இரவு 8 மணிக்கு மூன்றாமிடத்துக்கான போட்டியில் குருநகர் பாடுமீன் பி விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு மயிலங்காடு ஞான முருகன் அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் ஏ அணி மோதவுள்ளது. அனைத்துப் போட்டிகளும் நாவாந்துறை சென்.நீக்கிளஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கடல்வள குத்தகைதாரர் ராஜேஸ்கரன் மகிதரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வது உறுதி

## நியூசிலாங்துப் பிரதமர் உறுதி



இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய கவலை இருந்தாலும், அங்கு நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வது உறுதியென நியூசிலாந்தின் பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதாக இலங்கை அரசாங்கம் கூறுகிறது. ஆனால் கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற குடிநீர் பிரச்சினை தொடர்பான ஆர்ப்பாட்டத்தில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

மேலும் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழர்கள் இன்னும் பாதிக்கப்படுகின்றனர்.

மனித உரிமை மீறல்கள் பிடிக்கவில்லை அல்லது சில நபர்களைப் பிடிக்கவில்லை என வேறு நாடுகளுக்கு செல்லாமல் இருந்தால் கிழக்கு ஆசிய உச்சி மாநாடு மற்றும் ஏனைய விடயங்களுக்கு நாம் வெவ்வேறு நாடுகளுக்கு செல்லக் கூடாது.

இலங்கையில் இடம்பெறும் மாநாட்டைப் புறக்கணியாமல் தான் செல்வது உறுதியென அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# வடக்குக் - கிழக்கு இணைவை ...

மையாகும். அதாவது அதிகாரப் பகிர்வு என்பது நாம் பங்குதாரர்கள் என்ற எண்ணத்தில் வளர்ச்சி அடைந்தாலேயன்றி குறைந்த அதிகாரம் படைத்தவர்கள் கூடிய அதிகாரம் படைத்தவர்களால் முடக்கப்பட்டு விடுவார்கள். அவ்வாறான முடக்கங்களை நாம் தவிர்த்தால்தான் பிரதேச சபைகள் மக்கள் சேவைக்குப் போதியவாறு வழிசமைப்பன என்பதை எவருமே மறந்து விடக் கூடாது. நாங்கள் சேர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட்டுள்ளோம் என்ற எண்ணம் எம்முள் வலுப்பெற்றுவிட்டதாயின் எந்தச் சிக்கலையும் நாம் கடந்து சென்று உரிய சேவையை உரிய முறையில் மக்களுக்கு ஆற்றக் கூடியதாக இருக்கும்.

13-வது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரசியல் அமைப்பின் 9-வது அட்டவணையின் கீழ் முதலாம் பட்டியலின் நான்காம் விடயத்தில் உள்ளூர் அதிகாரமானது மாகாண சபைக்குரியது என்று கூறப்பட்டுள்ளது.

உள்ளூர் ஆட்சி, கிராமிய நிர்வாகம் போன்றவற்றைப் பொறுத்தவரையில் உள்ளூர் அதிகார சபைகளான நகராட்சி மன்றங்கள், பட்டின சபைகள், பிரதேச சபைகள் போன்றவை மாகாண சபைகளின் நிர்வாக அலகினுள்ளேயே வருவன. அவற்றின் யாப்பு அமைப்பு, கட்டுக்கோப்பு ஆகியன பாராளுமன்றத்தில் வகுக்கப்படுவன.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால் யாப்பு, அமைப்பு, கட்டுக்கோப்பு போன்றவற்றை விட உள்ளூர் அதிகார சபைகள் பாற்பட்ட மற்றைய அதிகாரங்கள் யாவும் மாகாண சபைகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. இது பற்றிய ஒரு கட்டுப்பாடு 4:3 என்ற விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கத்தைப் பார்ப்போம்.

"நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கு அமைய உள்ளூர் ஆட்சி சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படும். நகராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றக் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவும், பட்டினசபைகள் பட்டினசபைக் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவும், அதிகாரங்களை பிரயோகிப்பன.

பிரதேச சபைகள் நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கு அமைவாக அதிகாரங்களை கொண்டிருப்பன.

எனினும் மாகாண சபைகள் வேண்டுமெனில பிரதேச சபைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்க முன்வரலாம். ஆனால் அவற்றிற்கு தற்பொழுது வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பறிக்க மாகாண சபைகளுக்கு அதிகாரம் இல்லை.

இதிலிருந்து மாகாண சபைகளும் பிரதேச சபைகளும் கூட்டுச் சேர்ந்து மக்கள் சார்பான பல நடவடிக்கைகளில் இறங்க முடியும் என்பது புலனாகின்றது.

சட்டத்தால் இயற்றப்பட்ட உள்ளூர் சபைகளின் நிர்வாகம் பற்றிய மேற்பார்வை அதிகாரம் மாகாண சபைகளுக்குண்டு. இது அவற்றைக் கலைத்துவிடும் அதிகாரத்தையும் உள்ளடக்கும். ஆனால் அவ்வாறு கலைப்பதற்கு முன்னர் கலைப்பதற்கான காரணங்கள், அவற்றிற்கான சட்டபூர்வ நிவாரணங்கள் சம்பந்தமாக தோற்றமளவிலான நீதிமுறை விசாரணைகள் சட்டப்படி மேற்கொள்ளப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் சட்டபூர்வமான கணக்காய்வுக்கான ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

எனவே கலைக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தாலும் அந்த அதிகாரங்கள் தோற்றமளவிலான நீதிமுறை விசாரணைகள், சட்டப்படியாக மேலதிக நிவாரணங்கள் இருப்பின் அவற்றிற்கு அமைவாகவும் கணக்காய்வுக்கு அமையவும் அவை பிரயோகிக்கப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது.

1987-ம் ஆண்டுக்குப் முன்னர் சட்டமானது "அமைச்சர்" அல்லது "பொதுச்சேவை அலுவலர்" என்று கூறப்பட்ட இடங்களில் எல்லாம் அவை பட்டியல் ஒன்றில் விபரிக்கப்பட்ட அதிகாரங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தனவென்றால் அச்சொற்கள் தற்பொழுது ஆளுநரையோ, அமைச்சர் குழாமையோ குறிப்பிடுவன என்று 1989-ம் ஆண்டின் 12-ம் இலக்க சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

1987-ம் ஆண்டின் 15-ம் இலக்கச் சட்டமே பிரதேச சபைகள் பற்றிய சட்டம். அதற்குப் பிறகுதான் அதே ஆண்டின் 42-ம் இலக்க சட்டமாக மாகாண சபைச் சட்டம் அமுலுக்கு வந்தது.

மேற்படி பிரதேச சபைகள் சட்டத்தில், பிரதேச சபைகள் செயலாற்றிக் கொண்டிருக்கும் காலத்தைக் கட்டுப்படுத்தவோ, ஒரு வருட காலத்திற்கு நீடிக்கவோ, ஆணையியற்ற மத்திய அரசாங்கத்தின் மந்திரிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம் தற்போது மாகாண சபையினாலும் பிரயோகிக்கப்படலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதேபோன்று அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் மாகாண சபையிடம் தற்போது கையளித்திருப்பதை மனதில் கொள்ள வேண்டும். அதாவது மத்திய அரசாங்க அமைச்சர் என்று முன்னர் குறிப்பிடப்பட்டிருந்த இடத்தில் மாகாண சபை தற்பொழுது குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று விளங்கிக் கொள்ளலாம். ஆகவே மாகாண சபையின் அதிகாரம் இங்கும் விபரிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

ஆனால் பிரதேச சபைகளை மேற்பாாவை செய்தல், கலைத்தல் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திற்கு சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் சம்பந்தமாக மாகாண சபைகள் நியதிச் சட்டங்களை இயற்ற முடியாது. அதாவது பிரதேச சபைக்கு அதிகாரங்கள் விடயம் 4:2இனால் கையளிக்கப்பட்டிருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவது சட்டப்படி நடக்க வேண்டும். அரசியல் யாப்பின் உறுப்புரை 170இல் அரசியல் யாப்பில் சட்டம் என்றால் என்ன என்பது சம்பந்தமாக விளக்கம் தரப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபைச் சட்டம் 1987-ம் ஆண்டின் 15-ம் இலக்க சட்டத்தின் பிரிவு 185 பிரதேச சபைத் தவிசாளரை அல்லது உறுப்பினர்களை எந்தெந்தத் தருணங்களில் பதவி இறக்கலாம் என்றும் சபையைக் கலைக்கலாம் என்றும் குறிப்பிடுகின்றது. அதாவது பின்வரும் காரணங்களுக்காக சபையின் தவிசாளரையும் உறுப்பினர்களையும் அகற்றலாம்.

1. தகுதியில்லாமையும் தகுதியற்ற முகாமைத்துவமும்

2. சட்டத்தில் கூறப்பட்ட கடப்பாடுகளைத் தொடர்ச்சியாக செய்யப் பின்னிற்பதும் வேண்டுமென்றே காரியங்களை ஆற்றத் தவறுதலும்.

3. கடமைகளை ஆற்றுவதில் ஒழுக்கச் சீர்கேடுகள்.

4. மேலதிகாரிகளின் பணிப்புகள், அறிவுறுத்தல்கள், பரிந்துரைகள் ஆகியனவற்றை உதாசீனம் செய்து அவற்றை ஆற்றத் தவறுதல்.

5. சட்டத்தால் தரப்பட்ட அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தல்.

இவற்றின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்க அமைச்சருக்கு உரித்துண்டு.

இருவர் முன்னிலையில் பாத்திரமொன்று அரைவாசிக்குத் தண்ணீர் நிரப்பப்பட்டு வைக்கப்பட்டது. ஒவ்வொருவரிடமும் அந்தப் பாத்திரம் பற்றிய அவரது கருத்தை வெளியிடச் சொன்னார்கள். ஒருவர் அரைவாசி குறைகின்றது என்றாராம். மற்றையவர் அரைவாசி நிறைந்திருக்கின்றது என்றாராம். ஒரேயளவு தண்ணீர்தான் பாத்திரத்தினுள் இருந்தது. ஆனால் பார்த்தவரின் பார்வையில் வித்தியாசம் தெரிந்தது.

எங்கள் பார்வையும் எமது பிரதேச சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற திடமான கருத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். அதிகாரங்கள் எமக்கு இல்லையே என்று அங்கலாப்பதாய் அமையக் கூடாது. ஆனால் சட்டத்திற்கு அமைவாகவே நாங்கள் சிந்திக்கவும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். வருங்காலத்தில் எங்கள் மாகாண சபைக்கும் உங்கள் பிரதேச சபைக்கும் இடையில் போதிய புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் வளர வேண்டும் எனத் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பு கொச்சிக்கடை சிறிவீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வடக்கு-கிழக்கு இணைவை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது என கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரது இக்கருத்திற்கு தென்பகுதி இனவாதக் கட்சிகள், பொது பல சேனா, அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உட்பட பலர் எதிர்ப்பை வெளியிட்டிருந்த நிலையிலேயே விக்னேஸ்வரன் மீண்டும் அதே கருத்தில் நேற்று வலியுறுத்தியுள்ளமை பெரும் அரசியல் சர்ச்சையை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ-4-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் - கிழக்கு இணைவை ....

ஆண்டின 35-ம் இலக்க சட்டத்தால் **அபிவருத்திச் சபைகள** கொண்டு வரப்பட்டன. இவை மாவட்ட மட்டத்தில் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துவதாக அமைந்தன. ஆனால் போதுமானதாக அப்பகிர்வு அமையவில்லை.

1987-ம் ஆண்டின் 15-ம் **இலக்க பிரதேச சபைகள் சட்டம** ஓரளவு அதிகாரப் பகிர்வை பிரதேச மட்டத்தில் மக்களுக்கு அளிக்க முன்வந்தது. இதன் பின்னர் தான் 1987-ம் ஆண்டின் 42-ம் இலக்க மாகாண சபைகள் சட்டமானது 13-வது திருத்தச்சட்டத்துடன் கொண்டு வரப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் உள்ளீடலுடன் இலங்கை-இந்திய உடன்பாட்டுக்கு அமைய அரசியல் யாப்பில் திருத்தம் செய்யப்பட்டு 13-வது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது **மாகாண சபைகள** பற்றிய சட்டமும் நடைமுறைக்கு வந்தது.

ஆகவே முழுநாட்டையும் பாராளுமன்றம் தனது எண்ணத்திற்கேற்ப நிர்வகித்த காலம் போய் மாகாண சபைகள் மாகாண மட்டத்தில் நிர்வகிப்பதையும் பிரதேச சபைகள் பிரதேச மட்டத்தில் நிர்வகிப்பதையும் அறிமுகப்படுத்தினர். இது மற்றைய மாகாணங்களுக்குத் தேவைப்படாமல் இருந்த போதும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு நாம் எதனையும் அதிகப்படியாக வழங்கவில்லை என்ற ஒரு கருத்தை அரசியல் ரீதியாச் சிங்கள மக்களுக்கு எடுத்துரைக்கும் வண்ண்மாக மாகாண சபைகள் ஒன்பது மாகாணங்களுக்கும் ஏற்புடையதாக்கப் பட்டன. வடக்கும் - கிழக்கும் ஒருங்கிணைக்கப்பட்டன.

ஆனால் சில சட்ட சம்பந்தமான காரணங்களைக் காட்டி உச்ச நீதிமன்றத்தால் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டன.

தற்போது வட மாகாணம் ஒரு மாகாண சபையைக் கொண்டுள்ளது. பிரதேச சபைகளும் இந்த மாகாணத்தினுள் இயங்குகின்றன. அதிகாரப் பகிர்வு நடைபெறும் போது சட்டப்படி சில சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. ஒன்றுபட்ட நாட்டினுள் அதிகாரப் பகிர்வு என்று கூறும்போது மத்திய அரசாங்கம் தானாக முன்வந்து போதிய அதிகாரப் பகிர்வை மாகாணங்களுக்கும், மாகாணங்கள் போதிய அதிகாரப் பகிர்வை பிரதேசங்களுக்கும் கொடுக்க முன்வந்தால் அன்றி, ஒன்று மற்றொன்றின் செயல்பாடுகளில் சதாகாலமும் குறுக்கீடு செய்து கொண்டிருப்பன.

இதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி முறையில் அதிகாரப் பகிர்வு நடைபெற வேண்டும் என்று கேட்டுள்ளது. எமது இளைஞர்கள் ஆயுதமெடுத்து பிரித்துக் கொடுங்கள் என்று கேட்டு பிரிவினை பெறப்படாமல் ஆயுதங்கள் மௌனமாக்கப்பட்ட நிலையில்தான் மீண்டும் சமஷ்டி அலகைத் தமிழ் மக்கள தமது தேர்தல் ஊடாக உரக்கக் கோரியுள்ளார்கள். இது மத்திய அரசாங்கத்திடம் மாகாணம் வேண்டியிருக்கும் கோரிக்கை. ஆனால் அதே நேரம் மாகாணமும் பிரதேசமும் கூட்டாக வாழும்போது அவர்களின் அதிகாரங்களும் தெரிந்து கொள்ளப்பட வேண்டும்.

இன்று (நேற்று) மாகாண முதலமைச்சர் என்ற ரீதியில் முதன் முதலாக உங்கள் பிரதேச சபை கூட்டத்தில்தான் நான் பங்கேற்கின்றேன். சட்ட ரீதியாகப் பார்க்கும் போது இது ஒரு முக்கியமான சந்திப்பு. நாடளாவிய மத்திய அரசாங்கத்தின் குறுக்கீடுகளுக்கு எதிராகத் தேர்தலில் நின்று மாகாணத்தில் வென்றதன பின்னர் சிறிய அலகான பிரதேச சபை முன்னிலையில் நான் நிற்கின்றேன்.

அங்கு நாம் எந்த அடிப்படையில வென்றோமோ அதனை இங்கு மனதில் நிலைநிறுத்த வேண்டியது எனது கட

19 ம் பக்கம் பார்க்க

# மாவீரர் துயிலும் இல்லத்தை சூழ ...

தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில்நேற்று அதிகாலையேபெருமளவுஇராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படித்தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது 17 உறுப்பினர்கள் சபையில் இருந்தார்கள் எனவும் எவரும் எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் இருப்பினும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் கெடுபிடியையடுத்து நேற்று இந்தத் தீர்மானம் கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தறித்த மாவீரர் துயிலுமில்ல பிரதேசம் கைவிடப்பட்டிருக்கும் நிலையில் பல சமூகச் சீர்கேடுகளும், ஒழுங்கற்ற முறையில் இப்பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதாகவும் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும்

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டபின்பு மேற்படி மாவீரர் துயிலுமில்லம் முற்றாக அழிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பிரதேசம் தற்போது பற்றைகள் வளர்ந்த நிலையில் கைவிடப்பட்டுக் காணப்படுகின்றதாகவும் எனவே பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் அந்த பிரதேசத்தை துப்புரவு செய்ய வேண்டியது பிரதேச சபையின் கடமை. எனவே அந்த அடிப்படையிலேயே தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும்கூறப்படுகின்றது. (செ-6)


## நாளைய வழிகாட்டல் கருத்தரங்கில்...

- கனடா 3 வருட விசா படிக்க 3 இலட்சம் வரை உழைக்க
- போலந்தில் படிக்க, உழைக்க 7 இலட்சம் போதும்
- இத்தாலி சட்டரீதியாகச் செல்ல - அரியவாய்ப்பு

தொலைபேசி மூலம் முன்பதிவு முக்கியம்.
தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு / சாரதி அனுமதிப்பத்திரம் உடன் எடுத்துவரவும்.

பிரவேசம் இலவசம் (நிபந்தனைகளுடன்)

(C-5223)

*திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்*

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090



## STUDY IN MALAYSIA

நம்பகமாகவும் உத்தரவாதத்துடனும்

## STUDENT VISA

- Physiotherapy (இயன் மருத்துவம்)
- MBBS
- Nursing
- Pharmacy

No need IELTS / SPONSOR

போன்ற மருத்துவம் தொடர்பான பட்டம், பட்டப்பின் படிப்பு போன்ற கற்கைநெறிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(C-5224)

(UK, CANADA, AUSTRALIA, US
போன்ற நாடுகளுக்கான
Student, Work, Migration Visa
பெற்றுக் கொள்வதற்கான
ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.)

தொடர்புகளுக்கு :-
0777 444 225


# தமிழன் ஆளும் ஆட்சி...

பணியமாட்டோம்என எமது மக்கள் தெளிவாகக் கூறியுள்ளனர்.

இந்நாட்டில் ஜனநாயகம் இருப்பதாக சிலர் கூறிக்கொண்டு உள்ளனர். அவர்கள ஒன்றினைப் புரிந்து கொள்ள வேண்டும். இராணுவத்தின் அடககு முறைக்குள்தான எமது மக்கள் ஜனநாயகத்தினை தெரிவு செய்தார்கள்.

யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க, ராஜபக்ஷ பிரதிநிதியே தவிர தமிழ் மக்களின் பிரதிநிதியல்ல.

அவரால் தமிழ் மககளிற்கு கட்டளையிடவோ, தமிழ் மக்களினை அடிபணிய வைக்கவோ முடியாது.

எமது மண்ணில் விவசாயம், மீன்பிடி என்பவற்றை இராணுவம் செய்து வருகின்றது.

எந்த இலட்சியத்தற்காக மக்கள் எமக்கு ஒன்றுபட்டு வாக்களித்தார்களோ அந்த மக்களின் கண்ணீரை துடைப்பதற்காவது நாம் முயல வேண்டும்.

வடக்கினைபெரும்பான்மையுடன் கைபற்றுங்கள் நாங்கள் எல்லாவற்றினையும் பெற்றுத் தருவோம் என இந்தியா எமக்கு உறுதியளித்தது.

வடக்கு முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள நீதியரசர் விக்னேஸ்வரன்எமது மக்களின் உரிமைக்காகப்போராட வேண்டும் அவருக்கு பக்கபலமாக நாம் இருப்போம் என்றார் மாவை. (செ-4)


PERFETTI van Melle

## JAFFNA DISTRIBUTOR தேவை

- Accounts Clark (பெண்)
- Driver
- Sales Rep, Sales Man

(4307)

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு ஆட்கள் தேவை.

43, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி
யாழ்ப்பாணம். தொலைபேசி : 0771254894

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) புதிய பிரிவுகள் திங்கட் கிழமை ஆரம்பமாகின்றன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(Gov. Reg.No: W/A 76795)

**Vivekananda Academy** ,0212220393

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

Tel: 0213216928, 0774842464 (Gov. Reg.No: W/A 76795)

(C-5201)


# மாவீரர் துயி...

உள்ளது.

இதற்கிடையில் கரைச்சிப்பிரதேச சபையின் தீர்மானத்திற்கு அமைவாக கனகராயன் குளம் மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம் செய்யப்பட இருந்தது. இதனை அறிந்து கொண்ட பாதுகாப்பு தரப்பு 300க்கு மேற்பட்ட படையினர்மூலம் அப்பிரதேசத்தை சுற்றிவளைத்து எவரும் உட்புக முடியாதவாறு பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளனர்.

இதனால் சிரமதானப் பணி கைவிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக ஏனைய பிரதேசசபை உறுப்பினர்கள் மீதும் பயங்கரவாத குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முடுக்கி விடலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

(செ-6,4,11)

# சடலமாக மீட்கப்பட்ட...

யாலையில் உள்ள தனது சிறிய தாயின் வீட்டிற்கு முன்னால் வசித்துவந்துள்ளார்.

மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதனால் கன்னியர் மட வீதியில் அமைந்துள்ள காப்பகமொன்றிலும் இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 03-ம் திகதியன்று குறித்த பெண் காணாமலபோய்விட்டதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனநிலை பாதிக்கப்பட்ட பெண் யாரால் கடத்தி வரப்பட்டு பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் யாரும் கைது செய்யப்படவில்லையெனவும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி தெரிவித்தார். (செ-4)


## தேவை

லண்டனில் 72 வயதான ஆரோக்கியமான ஒருவரைக் கவனிப்பதற்கு ஒருவர் தேவை. பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத தாதி விரும்பத்தக்கது

முழு விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்தில் விண்ணப்பிக்கவும்

தவம் - 68 Burges Road, London E6 2BH England

(4186)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.